
கார்த்திகை
மார்கழி
1984

# தொடுவானம்



- இறையியல், அன்றும் இன்றும்
- மலர்ந்தது புரட்சிமலர் !
- (கிறிஸ்மஸ்) பரிசு
- புதுவருடம் காண்போம் !
- யாருக்காக ?

இறையியல் தேவையா ? ★ இறையியல் தேவையா ? ★ இறையியல் தேவையா ?

இலங்கை மெதடிஸ்த திருஅவையின் வெளியீடு
— THODUVANAM —
A METHODIST EDUCATIONAL BI - MONTHLY
WESLEY PRESS PUBLICATION

3/-

# எண்ணம்!



**கட்டுரை 'கட்'**

கடந்த முறை கு. எ. போ. கட்டம் 'கட்' பண்ணப்பட்டபோது திருப்பேரவைத் த[illegible] கட்டுரை 'கட்'டாகிவிட்டதே. இனிமேலாவது கடைசிப்பக்கத்தில் பிரசுரியுங்களேன்- [illegible] போ. கட்டத்தை.

— ஜோதினி சினித்தம்பி, துறைநீலாவணை.

**[illegible] பலே!!**

புரட்டாதி ஐப்பசி இதழைப் புரட்டும்போதே மகிழ்ச்சியாக இருந்தது. உண்மையில் இவ்விதழின் அம்சங்கள், பாராட்டுக்குரியவையே!

— S. R. குஞ்சித்தம்பி, கோ, கல்லாறு.

**'தொட்' 'பட'**

தொட்டதும் 'தொடுவானம்'
பட்டென முடியிது
கட்டுரைகளைவிட்டு
கதைகளாய்ப் போட்டாலென்ன?

— K. சுகுணா, மன்னார்.


## Gold and Fold

உமக்கென்ன? ஆங்கிலம் வராதோ? தேவாவின் பதிலில் Fold என்று இருப்பதற்கு பதில் Gold என்று அச்சடித்திருக்கிறீர்? இவ்வளவு பேராசைக்காரனா நீர்? (ஒழுங்காகப் 'புரூப்' பார்த்தால் நல்லது)

— P. ஞானகரன், சித்தாண்டி.

---

**இம்மாத வாக்குத்தத்தம்!**



அவர் (இயேசு) எப்போதும் கடவுள் தன்மையுடைய வராயிருந்தவர்; ஆனால் கடவுளுக்குச் சமமாயிருப்பதை அவர், பற்றிக் கொண்டிருக்கவேண்டிய ஒரு நிலையாகக் கருதவில்லை.

அதற்குமாறாக அவர் தம்மை வெறுமையாக்கிக் கொண்டு அடிமையின் தன்மையை ஏற்று மனிதனைப் போலானார். மனித உருவத்தில் காணப்பட்டு தம்மைத் தாழ்த்தினார். கீழ்ப்படிதல் உள்ளவராய் நடந்து மரணத்தை, அதுவும் சிலுவை மரணத்தை ஏற்றார்,

ஆகையால் கடவுள் அவரை மேலாக உயர்த்தி, எல்லாப் பெயருக்கும் மேலான பெயரை அவருக்குச் சூட்டினார்.

— பிலி. 2 : 6-9 புதிய மொழிபெயர்ப்பு 1975

## இறையியல்



## தேவையா?

ஆசிரியர் பக்கம்

தொடுவானம்

[இரு திங்கள் ஏடு]

கார்த்திகை — மார்கழி 1984

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கட்கு!

உங்கள் யாவருக்கும் 'தொடுவான'த்தின் திரு அவதார நல்வாழ்த்துக்கள் நவில்கின்றோம்.

எமது நாட்டின் நிலை, பிரச்சனைகள் எதுவுமே சீராக தீர்க்கப்படாத நிலையில் நாம் மீண்டும் ஒரு திரு அவதார விழாவினைச் சந்திக்கின்றோம். கடந்தமுறை எம்மனதின் ஆழத்தில் இருந்த பயம், மனச்சோர்வு, தயக்கங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் அப்படியே இருப்பதுபோலத்தான் தோன்றுகின்றது. எனவே இந்நிலையில் நாம் செய்யவேண்டியது என்ன? கிறிஸ்தவ இறையியல் நமக்கு ஒருவேளை உதவலாம்!

டியற்றிச் பொன் ஹோபர் ஜெர்மனியில் நாஜிகளால் சிறை வைக்கப்பட்டபோது, சிறையில் இருந்தபடியே அவர் தனது இறையியலை உருவாக்கினார். லத்தின் அமெரிக்காவில் இன ஒடுக்கல்கள், பொருளாதார அரசியல் நெருக்கடிகள் ஆகியவற்றின் மத்தியில்தான் குஸ்தாவோ குழியாரே (*Gustavo gutiarez*) தனது 'விடுதலை இறையியல்' (***A Theology of Libaration***) எனும் நூலை எழுதினார். இது போலவே பல பொன்னான இறையியல் முத்துக்கள் வாழ்வுச்சூழலிலிருந்தும், நெருக்கடிகளின் மத்தியிலிருந்தும் எழுந்துள்ளன. மேற்படி இறையியல் தத்துவங்கள் நமக்கு உதவலாம் என்பதைக் குறிப்பிடுவதோடு ''இறையியல் நமக்குத் தூரமானதல்ல'' எனும் உண்மையையும் விளக்கவே இத் 'தொடுவானம்' மலர்கின்றது.



கிறிஸ்து பாலனின் திரு அவதார நிகழ்வோடு எமது சொந்த இறையியலும் அவதாரமாகட்டும்! அவதரிக்கும் இறைவனின் விடுதலைச் செயற்பாடுகள் உங்களையும் அவ்வாழ்வுக்குள் நடத்திச்செல்லட்டும்!

— **ஆசிரியர்.**



# மலர்ந்தது !
# புரட்சிமலர் !!

ஓ . . . பெத்தலையிற் பிறந்த
பாராளும் மன்னவனே !
உந்தன் அவதாரம் . . .
சிறியவர் எங்களுக்கு
விடியலிற் பனிபோல்
விலகாத சிறுமையின்
விலங்குடைப்பு.
ஏனெனில் . . . நீதான்
சமத்துவத் தந்தையாச்சே !
பழமை யுடைப்புகளும்
புதுமைப் படைப்புகளும்
நிமலன் இயேசு
பிறந்ததினால்
ஏழையர் யாம் பெற்ற
பெரு வரங்கள்.

பழமையான பர்வதங்களையும்
ஏறித்தாண்டி
வீரியத்தோடு
வெளிப்படையாக
எளிமை கொண்டு எங்கள்
இல்லங்கள் தோறும்
விரையும் உந்தன்
நற்செய்திகள்
எங்கள் வாழ்க்கைக்கு
உரமாகின்றன .

வானம் இல்லாப் பூமி
வரண்டு போன பாலை
என்ற வர்ணனைகளின்
பிரதிபலிப்புகளான
மானிட அச்சக
மலிவுப் பதிப்புகள்
நாங்கள் . . .
பாலகனாய் அவதரித்த
பாராளும் வேந்தனின்
திரு அவதாரத்தால்
மறுமலர்ச்சியடைகிறோம் !

ஏனெனில் . . .
குடிமக்கள்
தோழனாய்
குவலயத்தில் உதித்த எங்கள்
இறைப்பெருந் தலைவன்
சோரம் போகின்ற
அடிமைக் குப்பைகளை
மோதி
நொறுக்கிட்ட
புரட்சி மலரன்றோ !

ஆகவேதான் . . .
பெத்தலை சூடிய
பாரிஜாதப் பூவின்
அவதார நினைப்பின்போது
எங்கள்
சிறுமைகள் . . .
. . . வறுமைகள்
யாவும்
ஒழிக்கப்படுகின்றன !

— S. புனிதசீலன் —



# இறையியல் கடைச்சரக்கல்ல...

தேவையா?

— பொன். ஆனந்தராஜா

'கிறிஸ்தவம்' — என்று கூறும்போது; இறையியல் என்ற சொல்லையும் கூறாமலிருக்க முடியாது. ஏனெனில் இந்து சமயத்துக்கு தத்துவங்களும், புத்த சமயத்துக்கு உளவியலும் எவ்வளவு சொந்தமோ அவ்வளவு சொந்தம் கிறிஸ்தவத்துக்கும் இறையியலுக்கும் உண்டு.

ஆனால், 'இறையியல்' என்றதுமே, நின்று, தரித்து, நவின்று நகைக்கும் கிறிஸ்தவர்கள் வெகுசிலரே! மற்றவர்களில் 'இறையியலுக்கும்' எமக்கும் என்ன? அது திருப்பணியாளருக்கு மட்டுமே உரியது என்பர் சிலர்; இறையியலுக்கு ஆங்கிலமொழி அவசியமாச்சுதே! எனவே நமக்கு அது ஒத்துவராது என்பர் வேறுசிலர்; 'இறையியல்' படித்தவர்கள் எல்லாம் கடைசியில் இறைவனே இல்லை! என்றுதானே சொல்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட இறையியல் நமக்கேன்? என்பர் மற்றுமொரு சிலர்; இறையியலா? கிலோ என்னவிலை? என்று கேட்பர் இன்னும் சிலர்; இவர்கள் எல்லாம் இப்படிக் கேட்பதற்குக் காரணம் இறையியல் என்றால் என்னவென்று புரியாத அறியாமையேயாகும். இதற்கு வேறு ஒரு காரணம். இறையியல் பற்றி ஆண்டாண்டு காலமாக வழக்கிலிருந்த நடைமுறைகளும், பாமர மக்களுக்கு தெளிவானமுறையில் அது புகட்டப்படாமையேயாகும். இதில் திருப்பணியாளரை மட்டும் குறை கூறிவிடமுடியாது; எமது சபை மக்களின் எதிர்பார்ப்புக்களும் இதில் அடங்கும். அவர்கள் ஆழமான கருத்துக்களை அளிக்கும் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள விரும்பாது அது தமக்குத் தேவையற்றது எனத் ... கழித்து விடுகின்றனர்.

## இறையியல் இலகுவானதே!

எனவேதான் இங்கு கூறமுயலும் கொள்கை 'இறையியல் என்பது கெட்டியான ஒரு உணவுப்பதார்த்தம் அல்ல. இலகுவில் சமிபாடையக்கூடிய இலகுவான உணவுப் பதார்த்தம்' என்பதே: உதாரணமாக 'திரு அவதார இறையியல்'(Theology of Incarnation) எனும்போது அது ஏதோ தீர்வையற்ற கடையில் வாங்கும் பொருள்போலத் தொனித்தாலும், உண்மையில் 'கடவுள் மனிதனானார்' என்ற மிக எளிய சொற்றொடர்களை மட்டும் அடிப்படையாகக்கொண்ட ஓர் கட்டிடமாகும். ஆனால் 'கடவுள் மனிதனானார்' என்ற அந்த மிக எளிய சொற்றொடர்களை ஏற்றுக்கொள்ளாது ஒருவன் எத்தனை சொற்றொடர்களை அள்ளி வீசினாலும், அவை வெறும் கொள்கைகளாக அமையுமேல்லாது இறையியலாக அமையமாட்டாது. எனவே திரு அவதார இறையியலைப் பொறுத்தவரையில், ஒருவன் 'கடவுள் மனிதனானார்' என்ற அடித்தளத்தைப் போட்டு ஒரு சிறிய குடிசையைக் கட்டலாம். வேறு ஒருவன் அதன்மேல் ஒரு வீட்டைக் கட்டலாம். வேறு ஒருவன் ஒரு மாளிகையைக் கட்டலாம். அல்லது குடிசையைக் கட்டியவன் தனக்கு வசதி ஏற்படும்போது, அடுத்தவருடைய அனுபவம், ஆற்றல், ஆகியவற்றின் துணைகொண்டு அதே அடித்தளத்தின்மேல் மாளிகையையே கட்டிக்கொள்ளலாம். அதற்காக அவ்வடித்தளத்தின்மேல் கட்டப்பட்ட

மாளிகைதான் 'இறையியல்' குடிசை 'இறையியல் அல்ல' என்று கூறிவிட முடியாது. ஆனால் குடிசையைக் கட்டியவன் இந்தக் குடிசையே எனக்குப்போதும் என்று வாழ்ந்துவிட முடியாது. தன்னைப்போல் அதே அடித்தளத்தில் மற்றவன் கட்டிய வீட்டை அவன் எப்படிக் கட்டினான் என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதுவே இறையியலில் மிக முக்கிய மான அம்சமாகும்.

நற்செய்தி நூல் ஆக்கியோர்களை நோக்கும் போது அவர்களில் ஒவ்வொருவரும் திரு அவதாரத்தை வெவ்வேறு நோக்குகளில் அணுகுகின்றனர். மத்தேயு, யூத சமய மட்டத்திலும், லூக்கா ஏழு மனுக்குல மட்டத்திலும், ... பிரபஞ்ச மட்டத்திலும் நோக்கி ...ளர். உண்மையில் யோவானது இறையியல் நோக்கையே இறையியலாளர் மிக முக்கிய இறையியல் கருத்தாகக் கொள்வர் ஆனால் அதற்காக மற்றய இருவரும் கூறும் நோக்கையும் தள்ளிவிடுவது கிடையாது. உண்மையில் பார்க்கப் போனால் முதலில் திரு அவதாரம் பற்றி எழுதிய மத்தேயு தனது நோக்கில் எழுத அதைப்படித்து லூக்கா அதிலிருந்து வளர்ச்சிபெற்ற கருத்தாக தனது நோக்காக எழுத: இவர்கள் இருவரது கருத்தையும் படித்த யோவான் அவை இரண்டிலும் இருந்து வளர்ச்சிபெற்ற கருத்தாகிய தனது நோக்காக எழுதுகின்றார்.

இதுபோலவே இன்று இறையியற் கொள்கைகள் ஒருவரிலிருந்து மற்றவருக்குத் தாவும் போது வளர்ச்சிபெற்று மாளிகையாகின்றது. இந்த மாளிகையின் ஒவ்வொரு அம்சமும் இறையியல் அம்சங்கள்தான். ஆனால் ஒவ்வொரு கிறித்தவனும் இவ்விறையியல் மாளிகையின் கீழ் மட்டங்களையே தடவிக் கொண்டிராது மேல் மட்டங்களுக்கும் செல்ல முயற்சிக்க வேண்டும். மேல்மட்ட இறையியல் நமக்கு ஒவ்வாது எனும் போக்கு முன்னேறுவதற்கு உதவிசெய்ய மாட்டாது.

## இறையியல் கடைச்சரக்கல்ல...

இறையியல் இலகுவானது என்று கூறி விட்டதால், அதுவெறும் கடைச்சரக்காகவும் மாறிவிடமாட்டாது. கிறிஸ்துவோ, கிறிஸ்தவ இறையியலோ, தெருவோரம் விலைகூறி விற்கப் படவும் முடியாது. ஒருமனிதன் தன்வாழ்வில் வாழ்வின் நிகழ்வுகளில் இறைவனை சம்பந்தப் படுத்தி என்ன நினைக்கிறானோ அதுவே இறையியலின் பரிணாம வளர்ச்சியின் முதற் கட்டமாகும். அவ்வாழ்வு நிகழ்வுகள் நிச்சயம் சமயத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டிராது, அது சமுதாய, அரசியல், பொருளாதார அல்லது வேறு எதுவுமாக இருக்கலாம். ஒனெனில் இறையியலை ஒரு குறிப்பிட்ட கட்டத்துள் மட்டும் அடக்கிவிட முடியாது. காரணம் இறைவன் எங்கும் இருக்கின்றார். எங்கும் காணப்படுகின்றார். எங்கும் செயல் படுகின்றார். இதனால் வாழ்வில் எது நடந்தாலும் அதில் ஓர் இறையியல் இருக்கவே செய்யும். இந்த அடிப்படையில் இறையியலை புரிந்து கொள்ளவேண்டும்! என்ற துறையில் முன்னனி வகிப்பவர் இன்றைய யப்பானிய இறையியலாளரான 'கொசுகே கொயாமா' ஆவார். 'எருமைமாட்டு இறையியல்' (Water Baffalow Theology) எனும் நூலில் அவர் காணுமிடமெல்லாம் இறையியல் அம்சங்களையே கண்டு கொள்வதை அவதானிக்கலாம். ஒரு தவளை இடைவெளிவிட்டுக் கத்துவதில் அவர் ஓர் இன்னிசையையே கேட்டு கடவுளின் படைப்பு மகத்துவத்தைப் புரிந்துகொள்கின்றார். அது மட்டுமல்ல ஒரு விவசாயி வயலில் வேலைசெய்யும் காட்சி, கிராமத்து மக்கள் தாரை, தப்பட்டைகளை அடித்துக்கொண்டு தமது சமய வழிபாட்டுக்கு செல்லும் காட்சி எருமை நீரில் மூழ்கிக் களிக்கும் காட்சி இவ்வாறான காட்சிகளிலெல்லாம் அவர் காணுவது 'இறையியல்' அம்சங்கள்தான்.

இவ்வடிப்படையில் ஒரு கிறிஸ்தவன் இறையியலைத் தன்னிடம் இருந்து பிரிக்க முடியாது. அவ்வாறு பிரிப்பாராயின் அவன் கிறிஸ்தவனாக வாழவே முடியாது. காரணம் அவன் தன்வாழ்வில் இறையியலைக் காண வேண்டியவன். தன் வாழ்வை இறையியல் ஆக்கவேண்டியவன்.

''வாழ்விலிருந்துதான் இறையியல்
பிறக்கின்றது'' ❋

---

எமது வாசக நேயர்களுக்கு
**நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்**
உரித்தாகுக !

---

கிறிஸ்மஸ் சிறுவர் கதை



# 'பரிசு'

— தேவரஜனி

"அம்மா நான் விளையாடப் போகப் போறேன்'' தாயின் வேத போதனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் எண்ணத்தோடு அடிக்கடி தொண தொணத்துக்கொண்டேயிருந்தாள் சேரா. தனது அயல்வீட்டு நண்பர்களான சூசானும், சலோமியும் குளக்கரையில் தனக்காகக் காத்திருப்பார்களே என்ற எண் அவளை வாட்டிக்கொண்டேயிருந்தது.

வரப்போகும் மேசியாவைப்பற்றி தாய் கூறிக்கொண்டிருந்ததெல்லாம் அரைகுறையாகத்தான் அவள் காதில் விழுந்திருந்தது. குளக்கரையில் சூசானுடனும், சலோமியுடனும் விளையாடத்தொடங்கியபோது அதுகூட மறந்துபோய்விட்டது.

இவர்களைவிடக் கொஞ்சம் பெரிய யூதச் சிறுவர்கள் 'மேசியா விளையாட்டு' விளையாடுவார்கள். அதாவது தமது மேசியா வருவதாகவும், அவர் ரோமர்களுடன் போர்புரிந்து யூதர்களைப் பெரிய பதவியில் வைப்பதாகவும் விளையாடுவார்கள். ஆனல் அந்த விளையாட்டெல்லாம் சிறுவர்களாகிய இவர்களுக்கு விளங்குவதில்லை. ரோமப் போர்வீரர்கள் வீதியில் வந்துவிட்டால் ஓடிப்போய் ஒளிந்து கொள்வார்கள். அவ்வளவு பயம்.

திடீரென்று சலோமி தூரத்தில் புழுதி பறப்பதைச் சுட்டிக்காட்டினள். சேரா கூறினள் ''ரோமப் போர்வீரர்கள்தான் குதிரையில் வருகிருர்கள். இப்போது வீட்டுக்கும் ஓடிப்போகமுடியாது. நாம் இங்கேயே பற்றைக்குள் ஒளித்துக்கொள்வோம்''. இதைக்கேட்டு நண்பர்கள் எல்லாரும் ஒளித்துக்கொண்டார்கள்.

வந்தவர்கள் எல்லாரும் குளக்கரையில் தண்ணீரைக் கண்டதும் நின்று இறங்கினர்கள். சூசான் மற்றவர்களிடம் கிசுகிசுத்தாள்

''அது குதிரைகள் இல்லையடி ஒட்டகங்கள்'' என்றாள். சேரா சொன்னாள் ''இவர்கள் போர் வீரர்கள் இல்லைப்போலத் தெரிகிறது. தொப்பி போடவில்லையே, தலைப்பாகைதானே கட்டியிருக்கிறார்கள்''. சலோமி சொன்னாள் ''அப்பிடித்தான் தெரிகிறது' உடுப்பும் பளபளப்பான பணக்காரர்களுடைய உடுப்புப்போலத் தெரிகிறது''.

கடைசியாக அவர்கள் போர் வீரர்கள் இல்லை எனத் தெரிந்ததும் பயம் குறைய மெல்ல வெளியிலே வந்தார்கள். சேரா மற்றவர்களிடம் கூறினாள் ''குடிசன மதிப்புக்கே இவர்கள் வந்தார்கள்போலத் தெரிகிறது. அப்படியானால் நம்முடைய ஆட்களாகத்தான் [illegible] வாருங்கள் பயப்படாமல் போய் [illegible] சேராவின் தலைமையில் மூவரும் போய் ஒட்டகத்தில் வந்த மூவருக்கும் வணக்கம் செலுத்தினார்கள்.

அவர்களில் நீளமான, பட்டு உடை உடுத்தியவர் கேட்டார் ''சின்னக் குழந்தைகளே இதுதானே பெத்லகேம்?'' சிறுவர்கள் மூவரும் ஒரே குரலாக ''ஆம் ஐயா'' என்றார்கள்.

''நீங்கள் யூதச் சிறுவர்களா?''

''ஆம் ஐயா'' மூவரும் கூறினார்கள்.

''உங்கள் மேசியா இங்கே ஒரு சத்திரத்தில் பிறந்திருக்கிறாராமே? அந்தச் சத்திரம் எங்கே இருக்கிறது?''

மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல மூவருக்கும் தெரியவில்லை. சத்திரம் எங்கே என்றுகூடத் தெரியவில்லை. அவர்களுடைய விளையாட்டிடமான அந்தக் குளக்கரை மட்டும்தான் அவர்களுக்குத் தெரியும்.

இன்னுமொரு அரச உடை உடுத்தவர் சொன்னார் ''உங்கள் மேசியாவைப் பார்க்கத்தான் நாங்கள் பரிசுகளோடு போகிறோம்''.

இதைச் சொல்லிவிட்டு அவர்கள் ஒட்டகங்களில் ஏறிப் போய்விட்டார்கள்.

பிறகு மூவரும் தொடர்ந்து விளையாடுவதற்குப் பயமாக இருக்கவே மூவரும் வீட்டுக்கு ஓடிவிட்டார்கள்.

சேரா வீட்டுக்குப் போனதும் தாயிடம் மேசியா பற்றிக் கேட்கத்தொடங்கினாள். இதுவரைக்கும் அம்மா சொல்லும்போது அரைகுறையாகக் கேட்டதெல்லாம் ஞாபகம் வந்தது. பிறகு சொன்னாள் ''அம்மா, மேசியா பிறந்திருக்கிறாராமே! சத்திரத்தில்?''

''ஓமோம். அப்படித்தான் பேசிக்கொள்கிறார்கள்'' என்று அம்மா சொன்னாள்.

''அப்படியானால் அம்மா நாமும் போய்ப் பார்த்துவரலாமா? என்று சேரா கேட்க அம்மா கூறினாள் ''நாம ஏழைகளாச்சுதே! போகும்போது பரிசுகள் ஏதாவது கொண்டு போகவேண்டும்! நம்மிடம் ஒன்றும் இல்லையே! பிறகு ஒருநாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்''

இதைக்கேட்ட சேரா கவலையுடன் படுத்துவிட்டாள்.

மறுநாள் நண்பர்கள் மூவரும் குளக்கரைக்கு விளையாடப் போனபோது, அங்கு ஒரு ஆச்சரியத்தைக் கண்டார்கள். என்றுமில்லாதபடி குளக்கரையெல்லாம் உள்ள செடிகளில் அழகான பூக்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. உடனே மூவரும் அப்பூக்களைப் பறித்து அழகாகக் கட்டத்தொடங்கினார்கள். சேரா கூறினாள் ''இந்தப் பூக்களை எனது பரிசுகளாக எங்கள் மேசியாவுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கப்போறேன்''. இவ்வாறு கூறிவிட்டு ஒரே ஓட்டமாக வீட்டுக்கு ஓடித் தாயிடம் இதைக் கூறினாள்.

தாய்க்குப் பூக்களைக் கண்டதும் ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. ''மேசியாவுக்கு நிச்சயமாக இந்தப் பூக்களைப் பார்த்ததும் மகிழ்ச்சியாக இருக்கும்'' என்று தாய் கூறினாள்.

பொழுதுபட்டதும் இரண்டுபேரும் பூக்களையும் எடுத்துக்கொண்டு சத்திரத்துக்குப் போனார்கள். அங்குபோய் மேசியாவான இயேசுபாலனைக்கண்டு பூக்களைக் கொடுத்தார்கள்.

பூக்களைக் கண்டதும் பொக்கை வாயால் சிரித்த இயேசுபாலன் அதைக் கொண்டுவந்த சேராவையும் பார்த்துச் சிரித்தார். ✽

✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽

# இறையியல், அன்றும் - இன்றும்

— றெக்ஸ் யோசப்

இறையியல் என்னும் சொல் இன்று பலராலும் பலதரப்பட்ட கருத்துகளிற் புரிந்து கொள்ளப்படுகின்றது. உலகையும் மனிதனையும் படைத்த இறைவனைப்பற்றிய சாஸ்திர அறிவே இறையியல் என்பர் ஒருசாரர். இறைவன், மனிதன், உலகம் இம் மூன்றுக்கும் இடையே யுள்ள அறிப்படைத் தொடர்புகளை ஆராயும் அறிவுத்துறையே இறையியல் என்பர் மறு சாரார். அதிலும் இறையியல் இம் மூன்றின் இருப்பையும் அடிப்படை உறவுகளையுமே (essential relations) ஆராயும் என்று சிலர் வாதிட; வேறுசிலர் அவை மூன்றிற்கும் இடையேயுள்ள நடைமுறைச் சம்பந்தங்களையும் (existential relations) அது கணிக்கும் என்பர். இவ்வகைகளின்படி இறையியல் என்னும் பதத்துக்கு வரைவிலக்கணம் வகுப்பதெனின்; இறையியல் என்பது மனிதன், உலகம் என்னும் இரண்டுக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள இருவழித் தொடர்புகளை ஆராயும் அறிவுத்துறை எனலாம். பண்டைய காலங்களிலிருந்து 19ம் நூற்றூண்டு வரையிலான இறையியல் ஆய்வுக்கோவைகள் யாவும் இந்த ரகத்தைச் சேர்ந்தவையே. இந்து மதத்தின் உபநிடதங்கள், சங்கராச்சாரியர், ராமானுஜர் போன்றோரின் சித்தாங்கள் முதலியனவும்; கிறிஸ்தவத் திருச்சபைப் பிதாக்களான கிறகோரியார், அகுஸ்தீனர், அக்குவினஸ் போன்றோரின் இறையியல் ஆக்கங்களையும் இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

19ம் நூற்றூண்டின் தொழிற்புரட்சி, மார்க்ஸீயப் புரட்சி, இருபதாம் நூற்றூண்டின் உலக யுத்தங்கள் முதலிய புரட்சிகளின் நிமித்தம், மேற்கு நாடுகளின் சிந்தனைப்போக்கு அடிப்படையான மாற்றங்களை அடைந்தது. தத்துவங்களையும், தர்க்க நியாயங்களையும், அளவையியல் ரீதியான சிந்தனைத் திறனையும் முன்வைத்து இறைவனையும் மனிதனையும் உலகத்தையும் அன்றுவரை ஆராய்ந்த இறையியல்; மேற்படி புரட்சிகளினால் ஏற்பட்ட சமூக – உள மாற்றங்களினால் உந்தப்பட்டு, மனிதவாழ்வையும், வரலாற்றையும், பிரபஞ்சத்தின் மாற்றங்களையும்; அக்கால கட்டங்களின் புதிய விஞ்ஞானங்களான மனித வாழ்க்கையில் (Existentialism) உளவியல் (Psychology) முதலியவற்றின் துணிபுகளையும் கருத்திற் கொண்டு தன் ஆய்வு முறைகளை விஸ்தரிக்கத் தொடங்கியது.

இதன் விளைவாக தற்காலத்திய இறையியற் துறைகளான ‘மனிதமைய இறையியல், ஈடுபாட்டின் இறையியல் – Theology of Involvement அரசியல் இறையியல் – Political Theology, விடுதலை இறையியல் Theology of Liberation முதலியன தோன்றியுள்ளன. இவையனைத்தும் மனிதனையும் அவனது வாழ்வுச் சூழலையும் (Life Situations) ஆய்வின் ஆரம்ப இடமாக அமைத்து, இறைவனை முடிவிடமாகக் கணிக்கின்றன. இதனால் இறையியல், வெறும் தர்க்க நியாயங்களால் ஏற்படும் சித்தாந்தம் என்னும் வரைவிலக்கணம் மாறி; இறையியல் என்பது மனுதவாழ்வின் மையமான ஆன்மீகத்தை நடைமுறையோடு இணைக்கும் திருஷ்டாந்தமாக அறிமுகப்படுத்தப் படுகின்றது. அதர்வது இறையில் ஒரு அகப்பொருள் மட்டுமல்ல அது அன்றாட வாழ்வின் பொருளும் ஆகும். (Theology is not only Speculative But Practical) எனவேதான், ஒரு ஊசி முனையில் எத்தனை அருபிகள் நிற்க முடியும் என்பது 18ம் நூற்றூண்டு இறையியலின் வாதமாயிருக்க; இன்று வன்முறைக்கும் ஆன்மீகத்துக்கும் இடையிலுள்ள சம்பந்தமும்;

அரசியற் சுபீட்சத்துக்கும் ஆன்மீக விடுதலைக்கும் இடையிலுள்ள உறவும், இறையியலாளர்களால் பரவலாக ஆராயப்பட்டு வருகின்றன.

கீழைத்தேச நாடுகளிலும் கூட இம்மாற்றம் இல்லையென்று கூறிவிட முடியாது. கிறிஸ்தவ இறையியற் சித்தாந்தங்கள் யாவும் மேற்சத்திய முதலாளித்துவ நாடுகளின் இறக்குமதி என்றிருந்த காலம்போய், 3வது மண்டல நாட்டு இறையியலாளர்களின் சர்வதேச மகா நாட்டைக் கூட்டும் அளவுக்கு இறையியலும் இறையியலாளர்களும் பெருகியுள்ளனர். (International Conference of Third World Theologians) அதுமட்டுமன்றி மூன்றுவது மண்டல நாடுகளின் இறையியல் பொதுவாக 'விடுதலை இறையியல்' (Liberation Theology) ஆகவேயிருப்பது; திருச்சபைகளும் அவற்றின் தலைவர்களும் சிந்திக்க வேண்டியதொன்றாகும். இந்நாடுகளின் அரசியல் ஆதிக்கங்கள், பொருளாதாரப் பலவீனம், திருச்சபைகளின் சாணக்கியம் முதலியவற்றை உன்னித்து நோக்கின் இத்தகைய நாடுகளில் அத்தகைய இறையியல் ஏன் தோன்ற வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும்.

மூன்றுவது மண்டலத்தின் கிறிஸ்தவ நாடுகளான லத்தீன் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் போன்றவற்றிலும், கிறிஸ்தவம் சிறுபான்மையாகவுள்ள நாடுகளான இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், கானா, கொங்கோ, தெற்கு ஆபிரிக்கா போன்றவற்றிலும் கூட நவீன இறையியல் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அவை, கிறிஸ்துவின் ஈடேற்றமும் மீட்பும், ஒருபக்கச்சார்பான ஆன்மீக விடுதலை மட்டுமல்ல; முழு உலகத்தையும் முழு மனிதனையும் — சமூக, பொருளாதார, ஆன்மீக, உளத் துறைகள் யாவையும் — உள்ளடக்கிய முழுமையான விடுதலை என்பதை வலியுறுத்தி வருகின்றன.

யேசுவின் திருச்சபை என்றைக்கும் ஒரு திருவருட்சாதனமாக (அருளின் அடையாளமாக) இருத்தல்வேண்டும்; அப்படி இருந்தால் மட்டுமே அது உலகில் இருப்பதிலும் அர்த்தம் உண்டு. The Church of Christ IS and ALWAYS MUST BE a SACRAMENT – தனி மனிதர்களையும் சமூகங்களையும் இன்று பல சமூக, உள, ஆன்மீகத் தளைகள் பிணித்துள்ளன. அவற்றிலிருந்து அவர்கள் விடுதலைபெற்று முழுமை அடையக் கிறிஸ்துவின் ஒளியில் வழி காட்டுவதே, இருபதாம் நூற்றாண்டு இறையியலின் தனித்துவமான நோக்கமாகும். அதனைச் செய்து முடிப்பதே, இன்றைய உலகில் திருச்சபைகளின் தலையாய பணி என்க. ✱

**"தொடுவானம்" தை - மாசி 1985**

1985 புத்தாண்டின் முதல் இதழ்

## சிறுகதைச் சிறப்பிதழாக

மலர்கின்றது.

உங்கள் சிறுகதைகளைக் கிறிஸ்தவ பின்னணியில், தெளிவான எழுத்தில் அரைத் தாளில 3 பக்கங்களுக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்புங்கள்.

சிறுகதையின் பொருள் : **'தீர்மானங்கள்'**

**அதிசிறந்த சிறுகதைக்குப் பரிசு உண்டு!**

இறுதித் திகதி : 20-01-1985.



**சிறுகதை**

# யாருக்காக?

— ஜெ. செல்வராஜ்

கண்ணை மூடி கற்பனையில் மூழ்கியிருந்த ஜானியின் செவிகளில் தாய் மேரியின் வார்த்தை மூன்றுவது முறையாக அலைமோதுகின்றன.

''ஏண்டா! உன் மனசில என்னதான் நினைச்சிட்டிருக்கா. வரவர நான் உனக்கு அம்மா என்கிறதயே மறந்திடுவாபோல இருக்கு. என் அண்ணன்கூட இன்டைக்கு வீடுதேடி வந்தார். நம்ம அதிஷ்டம் உன்ன மாப்பிள்ளையா கேட்டுத்துப்போரார். பழைய பகைகூட மறந்துபோச்சு. உன் முடிவுதான் என்ன?'' வினாக்குறியுடன் நிறுத்துகிறாள்.

தாயைக் கூர்ந்துநோக்கிய ஜானி ''ஏம்மா திருமணத்திற்கு இப்ப என்ன அவசரம். இன்னும் ரெண்டு வருஷம் போகட்டுமே''. போலியாகக் கூறி சிரிக்கமுயல்கிறான் முடியவில்லை.

மேரிக்கு இவை ஏற்கனவே கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன வார்த்தைகள். அலுத்துக்கொண்ட மேரி ஆதங்கத்துடன் அடுத்த வேண்டுதலை அன்புடன் விடுக்கின்றாள்.

''ஜானி, ஏப்பா இப்படி சன்னியாசி மாதிரி தாடி வளர்த்திட்டு, எத்தன தடவ சொல்லிட்டன் இத எடு எடுன்னு. உன்ன பார்க்கவே எனக்கு அருவருப்பா இருக்கு'' தாயின் அங்கலாய்ப்பு.

ஜானி தனது நான்கு வயது நிரம்பிய தாடியை ஒருமுறை தடவிக்கொண்டான். தாடியைத் தடவுவதில்தான் எத்தனை சுகம். மனதில் நினைத்தவாறே தாயைக் கனிவுடன் நோக்குகிறான்.

பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின் வயிறு பற்றி எரிந்தது. ''மூத்தவன் பீற்றர் அமெரிக்காவில குடும்பமாயிட்டான். அடுத்தவன் சைமன் ஜெர்மனியில உட்காந்திட்டான். கணவன இழந்த எனக்கு கடைசிகால கடமைகளையாவது முடிப்பானென்று நம்பியிருந்தேனே. ஆனா இவன் சன்னியாசியா மாறிட்டானே. எவனெவனோ எப்படி எப்படியெல்லாமோ வாழ்றான். ஆனா இவன், பெற்ற வயிற்றில நெருப்ப அள்ளிக் கொட்டுறானே. இன்டைக்கு ரெண்டிலொன்று பார்த்துவிடுறன்''. கருவிக்கொண்டே சமாதானமடைகிறாள் மேரி.

ஜானி. பெயரில் மட்டுமல்ல தோற்றத்திலுமே ஓர் ஞானியாகியிருந்தான். எண்ணெய் பூசி வாரப்படாத சுருண்ட கேசம், முகத்தில் பாதி சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கும் தாடி, உட்குழிவான கண்கள், உடல்வாட்டத்தைப் படம்பிடித்துக் காட்டிக்கொண்டிருக்கும் கசங்கித் தொய்ந்துபோன உடைகள், முப்பது வயதே நிரம்பிய ஜானி அறுபது வயது ஞானியாகத் தோற்றமளித்தான்.

வீட்டுக்குள் நுழைந்த ஜானி, கூரை முகடை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த தாய் மேரியைக்கூட லட்சியம் பண்ணாமல் மண்டபத்தில் கிடந்த சாய்மானக் கதிரையில் சாய்ந்துகொண்டான்.

''அம்மா, தாடி நானா வளர்க்கிறன். இல்லையே. அது தானாத்தானே வளருது'' சாதாரணமாகக் கூறுகிறான் ஜானி.

''ஆமாண்டா, நீ இதுவும் சொல்லுவா இதுக்குமேலயும் சொல்லுவா. பெத்த வயிறு கேட்குதில்லையே. உன்ன ஒழுங்கா பார்த்து எத்தன வருஷமாகுது?'' தாயின் குமுறல் அழுகையாகின்றது.

ஜானியின் வாழ்க்கை நான்கு ஆண்டுகள் பின்னோக்கி நகர்கின்றன. ஓ! அந்த நாட்கள் என் வாழ்வின் வசந்த நாட்கள். ஜானி அப்போது ஓர் ரஜனி. நடை, உடை யாவும் அப்போது ரஜனி பாணியிலேயே இருந்தன. உருவம்கூட ஓரளவு 'சுப்பஸ்டார்' ரஜனியின் சாயலைப் பறைசாற்றியதால் நண்பர்கள்கூட அவனை ரஜனியென்றும் அழைப்பதுண்டு.

அந்த பல்கலைக் கழகத்தில் ஜானி ஓர் கதாநாயகனாக வலம்வந்துகொண்டிருந்தான். அவனைச் சுற்றியே எப்போதும் நண்பர்கள் குழாம். படிப்பில் மட்டுமல்ல விளையாட்டில் கூட அவனுக்குநிகர் அவனேதான்.

அவனைத் தனது கதாநாயகனாக்க எத்தனையோ கதாநாயகிகள் வலைவிரித்தபோதும் ஏனோ அவன் மனம் நீலா நீலா என்று ஏங்கிக்கொண்டிருந்தது.

சுருக்கமாக அழகின் மொத்த உருவமே நீலா. அவளின் ஓரவிழிப் பார்வைக்காகத் தவமிருந்து மட்டம் தட்டப்படும் இளவட்டங்கள் எத்தனை? எத்தனை?

அவன் அழகன், அவள் அழகி. அழகும் அழகும் ஒன்றுசேராமல் இருக்கமுடியுமா?

கடற்கடையிலும், பூங்காவிலும், நூல் நிலையத்திலும் அவர்கள் காதல்ச்செடி தளிர்விட்டு, துளிர்விட்டுத் தழைத்துக்கொண்டிருந்தது. பல்கலைக் கழகச் சுவர்களில்கூட ஜானி, நீலா காதல் விவகாரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

முற்றிய காதல் கனியுமுன்னர் ஓ மை காட்! அந்த நிகழ்ச்சி. ''கடவுளே! என்னை அப்படி வஞ்சித்திருக்கவேகூடாது, கூடாது, கூடாது'' ஜானி அலறுகிறான்.

மேரி பதறுகிறாள் ''என்னடா பகற்கனவு காண்கிறாயா? கூடாது, கூடாது, எதுகூடாது? உனக்கு திருமணம் செய்துவைக்க தவியாய்த் தவிக்கிறேனே அது கூடாது. ஊனத்தை மறைத்து உன்னைப் பழைய நிலைக்குக் கொண்டு வரப் பாடுபடுகிறேனே எது கூடாது'' தாய் சுயசரிதை பாடி ஓய, ஜானியின் நினைவுகள் தொடர்கிறது.

அந்த விபத்தில் மூச்சையாகி மூன்று நாட்களின்பின் நினைவு திரும்பியபோது, டாக்டர் ராகவன் கூறிய அந்த வார்த்தை ''ஐ ஆம் சொறி ஜானி. கடவுள் கருணையில உங்க உயிர காப்பாத்திட்டாலும், உங்க கரத்த எங்களால காப்பாற்றமுடியல்ல.''

''டாக்டர் நீங்க.....'' வார்த்தையைத் தொடரமுடியாமல் தவித்த ஜானியை மீண்டும் மயக்கம் அரவணைக்கிறது.

ஜானி தனது இடக்கரத்தை இழந்து காலாண்டு பறந்துவிட்டது.

''நீலா, நீகூடவா இப்படி. என்னால் நம்ப முடியவில்லையே''

''ஜானி உங்க உடல ஊனமாக்கி எங்கள வாழவிடாம பிரிச்சிட்டான் அந்தக் கடவுள்''

ஜானி சீறுகிறான் ''நீலா! என்னோட உடல் ஊனமானாலும் உள்ளம் இன்னும் ஊனமாகல்ல. ஆனா உன்னோட உள்ளம் ஊனமாயிட்டு இல்லையா?''




'தொடுவானம்'

(இருமாதமொருமுறை)

மெதடித்த திரு அவையின் தமிழ் சஞ்சிகை.

வருட சந்தா ரூபா 15/- மட்டும்

தனிப்பிரதி விலை ரூபா 3/-

''ஜானி! நீங்க என்ன நினைத்தாலும் பரவாயில்ல, நான் ஊனமுற்ற ஒருவரோட வாழத் தயாராயில்ல'' கூறிவிட்டு நகர்கிறாள் நீலா.

ஜானி திக்பிரமை பிடித்தவனாக அமர்ந்து விட்டான். நீலா இப்போதெல்லாம் ஜானியைப் பார்க்கக்கூட வருவது கிடையாது. ஜானியைத் தனிமை ஆட்கொள்ளத்தொடங்கியது. அப்போதுதான் அவன் ஊனத்தை உணர்ந்து உலகத்தை வெறுத்தான்.

பழைய நினைவுகளிலிருந்து மீண்ட ஜானி ஓர் உத்வேகத்தின் உந்துதலால் எழுகிறான். அந்த இறுதி முடிவுடன் இரண்டே இரண்டு மைல்கள் தொலைவில்தான் இருக்கவே இருக்கிறது வாழ்க்கையை வெறுத்த பலரிற்குத் தஞ்சமளித்த கடலெனும் மடம். உற்சாகத்துடன் கடலை நோக்கி விரைகிறான்.

கடல்தாயை அவன் அண்மிக்கும் முன்னரே – அலைகடலின் கோரக் கரங்களுக்குள் சிக்கித் தவிக்கும் ஓர் உருவத்தை அவன் கண்கள் கண்டுவிடுகின்றது. அவனுக்கு நீச்சல் தெரியாவிட்டாலும் - அவன் மனித மனத்தின் உந்தலும், வாழ்வை வெறுத்த வெறியும் ஒன்றுசேர அவனையறியாமலேயே கடலிற் பாய்ந்து அந்த நடுத்தரவயது மாதைத் தலைமயிரிற் பிடித்து இழுத்துவந்து கரையிற் போடுகிறான்.

மயக்கத்திலும் அப்பெண்மணி ''ஏனப்பா நீ என்னைக் காப்பாற்றினாய்? கடவுளே எனக்குச் சாகவும் உரிமையில்லையா?'' என்று முனகிக்கொண்டிருந்தாள். அவள் மயக்கத்தைத் தெளியவைக்க அவன் முயற்சிகள் எடுக்கமுன் அப்பெண்ணின் உறவினர்கள் அவ்விடத்தில் சேர்ந்துவிட அவன் கடமை முடிந்து எழுந்து வந்தவழியே திரும்பி நடக்கிறான். அவன் உள்ளத்தில் மட்டும் அப்பெண் முனகிய குரல் திரும்பத் திரும்ப ஒலிக்கிறது.

''கடவுளே! எனக்கு சாகவும் உரிமையில்லையா....?''

களைப்புடன் நடந்துகொண்டிருந்த அவன் காதுகளில் திடீரென ஒலிபெருக்கியில் ஒலித்த அந்தப் பாடலின் வரிகள் தைக்கின்றன.

உனக்காக நான் மரித்தேனே!
எனக்காக நீ என்ன செய்தாய்?

அவன் கேள்விக்கு அந்தப் பாடலின் கேள்வியே பதிலாக ஒலிப்பதுகண்டு அவன் தனக்குள் வியப்புறத்தொடங்குகிறான்.

பல்கலைக்கழகத்திலும் அவன் படித்திராத ஓர் புதிய பாடமொன்று அவனுக்குள் போதிக்கப்படுவது போன்ற ஓர் உணர்வு. ஆம்! உயிரைப் பறிக்கும் உரிமை, அதனைப் படைத்த இறைவனுக்கே உண்டு! மனிதனின் கடமை தன்னைப் படைத்த இறைவனுக்காகச் செயல்படுவதுதானே?

தீப்பொறியெனத் தெறித்த இந்த ஞான உணர்வுகள் அவனைத் தீர்க்கமாக ஆட்கொள்ள அவன் நடையில் ஓர் வேகம் பிறக்கிறது. ✤

**தேசிய சேவையில் ஒலிபரப்பாகவிருக்கும்**
**கிறிஸ்து பிறப்புக்கால சிறப்பு வானொலி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 19 | – | கிறிஸ்மஸ் பாடல்கள் — — — — | பி. ப. 07-45 |
| | 20 | – | கிறிஸ்மஸ் ஏன் கொண்டாடுகிறோம் — — | பி. ப. 07 45 |
| | 21 | – | கிறிஸ்மஸ் கதை — — — — | பி. ப. 09-30 |
| | 22 | – | கிறிஸ்மஸ் உரைச் சித்திரம் — — — | பி. ப. 06-30 |
| | 23 | – | கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை — — — | பி. ப. 10-00 |
| | 24 | – | கிறிஸ்மஸ் நாடகம் ''தெய்வத் திரு மைந்தன்'' | பி. ப. 07-40 |
| | 25 | – | கிறிஸ்மஸ் ஆராதனை — நத்தாரும் நாமும் — | மு. ப. 10-00 |
| | ,, | – | கவியரங்கம் — பெத்லகேம் பெற்றுத்தந்த இன்பம் | மு. ப. 11-30 |
| | 31 | – | திருவிழிப்பு ஆராதனை — — — | பி. ப. 11-00 |

# அன்னைக்கு எம் அஞ்சலி!



## தீக்குளித்தல் ஆகுமோ?


அன்னை யென்னும் இந்திரா
தன்னை ஈந்த இந்தியா
ஆசி யாவின் ஜோதியாய்
ஒளிரு கின்றார் பாரினில்.

நாட்டு மக்கள் வாழ்க்கையை
சட்டம் போட்டு வகுத்தவர்
சுட்ட அந்தத் துட்டனின்
கொட்டம் கண்டு நகைத்தவர்

குண்டு பட்டு உடலினின்
குருதி கொட்டும் வேளையும்
உறுதி கொண்ட நெஞ்சுடன்
இறுதி வாழ்வை முடித்தவர்

கொதிக்கு மிந்து சமுத்திரம்
கொந்த ளிக்கும் பாரதம்
தீர முள்ள தாயவள்
தீக்கு ளித்தல் ஆகுமோ!

— J. செல்வராஜ்.



# தேவாவின் பதில்

## பிறர் குறை கூறும் மனித இயல்புபற்றி உளவியல் ரீதியான உங்கள் கருத்து என்ன?

**— செல்வி K. கந்தையா, துறைநீலாவணை.**

இக் கேள்விக்குரிய விடை, ஓரளவிற்கு உங்கள் கேள்வியிலேயே பொதிந்திருக்கின்றது. அதாவது உங்கள் கூற்றுப்படி 'பிறர் குறை கூறுதல்' — ஒரு மனித இயல்பு என்பதை நீங்களே ஏற்றுக் கொள்கின்றீர்கள். ஆகவே, இது மனித இயல்பானால், இதற்கு விதிவிலக்கானவர்கள் ஒருவருமே இருக்கமுடியாது. ஆயினும் இந்த இயல்பு களையப்படுதல் நலம்; இதற்கு நாம் எவ்வகை சிகிச்சையைக் கையாளலாம் என்பதைக் கண்டு கொள்வதற்கு, இவ்வியல்பு எவ்வாறு எம்மில் தோன்றுகின்றது என்பதை அறிதல் அவசியம்.

இரண்டு சிறிய பிள்ளைகள், அவர்கள் சகோதரரும்கூட. பிறந்தபோது ஒரு பிள்ளை மற்றப் பிள்ளையைப்பற்றி குறைகூறவோ, குற்றம் சாட்டவோ முனையவில்லை. ஆனால், சடுதியாக ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பிள்ளை தன் பெற்றோருக்கு மற்றச் சகோதரனின் குறையை, முறைப்பாடாகச் சொல்கின்றான். இந்த முறைப்பாட்டைக் கேட்ட பெற்றோர் ஒரு பிள்ளைக்குத் தண்டனை வழங்குகின்றனர். இதுதான் முதல் முறையாக ஒரு பிள்ளையின் வளர்ச்சிப்பருவத்தில் ஏற்பட்ட குறைகூறலின் அனுபவம். நான் என் சகோதரனைப்பற்றி ஒரு முறைப்பாட்டைச் செய்தால், என் பெற்றோர் அவனுக்குத் தண்டனை வழங்குவர். இது ஒரு பிள்ளைக்குத் திருப்தியின் அனுபவமாகக் காணப்படுகின்றது.

இதுவே குடும்பத்தினூடாக, சமுதாயத்துக்குள்ளும் ஊடுருவுகின்றது. 'குறைகூறல்' என்னோடு பிறந்தவொரு இயல்பல்ல. ஆனால், நான் வளர்த்துக்கொண்ட ஒருசுபாவம். இதை நான் ஆரம்பித்தபோதே எனக்கு வெகுமதி கிடைத்தது. எந்த வேளைகளில் நான் மற்றவர்களின் குறைகளை மட்டும் விமர்சனம் செய்தேனோ அந்த வேளைகளில் எனக்குப் பல பரிசில்கள் கிடைத்தன. இது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியான அனுபவம். இதை நான் வளர்த்துக்கொண்டு வந்துவிட்டேன். நான் செய்வது சரியா / பிழையா / நன்மையானதா / தீமையானதா, என்று ஒருபோதுமே நான் எடைப்போட்டுப் பார்த்தது கிடையாது. நான் குறைகளைக் கூறும்போது அனேகர் பொறுமையாகக் காதுகொடுத்துக் கேட்பார்கள். இது எனக்கு நல்ல வரவேற்பைக் கொடுத்தது. இதுவரையில் ஒருவராவது எனது குறைகளை நேரடியாகக் கூறவில்லை. யாரையாவதுபற்றி குறைகூறத் தொடங்கினால், ஒரு கூட்டமே கூடிவிடும். நான் பலவேளைகளில் ஒரு கதாநாயகனாக மாறிவிடுவேன். என்னோடு கூடுபவர்கள் நான் சொல்லும் கருத்துகளுக்கு மேலும் பல சுவையான அம்சங்களைச் சேர்த்துவிடு

வார்கள். இதனால் நான் ஒரு சிறிய கதையையே புனைந்துவிடுவேன். இது எனது கலையாக மாறிவிட்டது. நான் இந்தக் கலையை எனக்குப் பலர் ஆதரவு தந்தார்கள். ஒருவேளை நான் மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுவதினால், அவர்கள் தாக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இதுவரை அவர்களது தாக்கத்தின் அனுபவத்தை என்னுடன் பகிர்ந்து கொள்ளவில்லை. ஆகவே இது ஒரு தீய சுபாவம் என்று இன்னும் எனக்குப் புலப்படவில்லை. நான் சமூதாயத்தில் ஒரு கௌரவமான பதவியை வகிக்கின்றேன். ஆகவே நான் ஒரு குறையும் அற்றவன் என்ற தத்துவத்தில்தான் செயல்படுபவன். நான் பலவேளைகளில் என்னைப் பூரணமாக அறிந்தவன் என்றும் எண்ணுவதுண்டு. இந்த வேளைகளில் எல்லாம், நான் சமுதாயத்தில் உள்ள ஒரு சிலருடன் என்னை மேலெழுந்தவாரியாக ஒப்பிட்டுப் பார்ப்பேன். அப்போது நான் அவர்களிலும் பார்க்க சிறந்தவன் என்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுவதுமுண்டு. ஆகவே என்னில் எந்தக் குறையும் இருக்க முடியாதென்ற ஒரு அடிப்படை நம்பிக்கை எனக்குண்டு. இவ்வாறே எனது வாழ்நாட்கள் கழிகின்றன,

பிறர் குறைகூறும் மனித இயல்பு வளர்வதற்கு காரணங்கள் பலவுண்டு.

1. என்னை நான் பூரணமாக அறிந்தால் எனது குறை இதர மக்களின் குறையிலும் பார்க்க, எனக்கு முழுமையாக தெரிய உணரக்கூடியதாக இருக்கும்.

2. இதர மனிதரின் குறையைமட்டும் நான் பேசுகின்றேன். ஏனெனில் அவர்களின் நிறைவைப் பேசுவதிலும் பார்க்க, குறைவைப் பேசினால், எனககு என்னைப்பற்றிய ஒரு திருப்தி ஏற்படுகின்றது.

3. பிறர்குறையை நான் கூறும்போது (அனேகமாக) எனது குறையைத்தான் கூறுகின்றேன். (கண்ணாடி மாளிகையில் வசிப்பவர்கள் கல்றெறியக் கூடாது)

4. மனிதர்களின் குறையை நான் இழிவாகப் பேசுவதன் காரணம் எனக்குள் இருக்கும் பொறாமை – நப்பாசை – ஆணவம் - எனது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத விரக்தி. (எட்டாத பழம் புளிக்கும்)

5. நிறைவுகளைப் பேசினால் புதுமை – புரட்சி – அதிகம் இருக்கமாட்டாது. குறைவுகளை பேசும்போது,
‘சஸ்பென்ஸ்’ அதிகம்,
‘சுவாரஸ்யம்’ அதிகம்.
மற்றவர்களை வதைத்து இன்பம் அனுபவிப்பவர்களுக்கு, இதைவிட வேறு சுவர்க்கம் கிடையாது. ✻

---

நினைவுத் திரையில்...

# ஐந்தாண்டு நினைவஞ்சலி



**திரு. ஜோர்ஜ் நாகேந்திரன் வேலுப்பிள்ளை**

31-8-1930 — 1-12-1979

(துறைநீலாவணை)

ஆண்டுகள் ஐந்துமே ஓடி மறைந்தன
ஆண்டவர் திருவடி சென்றடைந்து;
ஆண்டுகள் ஆயிரம் போயிடினும் உங்கள்
அன்பை நினைந்து - துதி செலுத்தும்

— மனைவி, பிள்ளைகள்.

குறுக்கெழுத்துப் போட்டி ‘5’க்கான பரிசுகள் திரு. நாகேந்திரன் அவர்களின் நினைவாக வழங்கப்படுகின்றது. இப்பரிசினை வழங்கிய அன்னாரின் குடும்பத்தவர்கட்கு எமது நன்றிகள் !

பரிசு பெறுவோர் விபரம் :–

1. செல்வி ஜோ. சீனித்தம்பி – துறைநீலாவணை (85/-)
2. திரு. M. G. தம்பிராஜா – கல்லாறு (60 -)
3. திரு. தி. சிறிதரன் – மட்டக்களப்பு (35/-)

பாராட்டுப் பெறுவோர் :–

செல்வி P. J. சுகிர்தமலர் – கோமாரி. திருமதி D. யோசுவா – கொழும்பு 3.

(இப்பரிசினுள் ஒரு புதிய மெகடித்த பாட்டுப் புத்தகமும் அடங்கும்)

# போதகர் வீட்டுக் குருவிக்குஞ்சும் போதிக்கும்

— நித்தி - ஜேம்ஸ்



அது ஒரு போதகர் வீடு. காலை வேளைக்குரிய கடமைகளில் மூழ்கியிருந்தனர் அவர்கள். அந்தவேளையில்தான் நான் அங்கு சென்றேன். என்னைக் கண்டதும் வரவேற்க வந்தார் ஒருவர். வந்தவர் - அந்த அறையினுள் இருந்த ஒரு மேசையில் ஒரு உயிர் ஆதரவு தேடி அசைவதைக் கண்டுவிட்டார். பார்ப்பதற்கு மிகச் சிறியதாக, அருவருக்கத்தக்க உடலோடு இருந்த அந்த உயிர் — அங்கு பறந்துதிரியும் அடைக்கலாம் குருவி ஒன்றின் குஞ்சுதான் என்பதை அதன் மிகச் சிறிய சொண்டே அடையாளம் காட்டி

## எழுதுங்கள் !

★ சிறுகதைகள்
★ கவிதைகள்
★ துணுக்குகள்
★ செய்திகள்

இவைகளை எழுதியனுப்புங்கள்.

உங்கள் ஆக்கங்கள் தொடுவானத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

உங்கள் ஆக்கங்கள் பிரசுரமாகாதவிடத்து அவற்றைத் திரும்பப் பெற விரும்பினால் —,60 சத தபால் தலையுடன் அனுப்புங்கள்.

முகவரி:

'தொடுவானம்'
மெதடித்த குருமனை,
கல்லாறு — கி. மா.

எதிலாவது வைத்துவிடுவோம் என்று வைத்தும்விட்டோம்.

இப்பொழுது நான் தனித்துவிட்டேன். வரவேற்பறையில் கிடந்த பழைய பத்திரிகைகளைப் புரட்டிக்கொண்டிருந்தேன். திடீரென ''ஐயோ...'' என்ற பெண்குரல், அவ்வறையினுள் கேட்டுத் தலைநிமிர்ந்தேன். மருண்ட விழிகளோடு என்னைப் பார்த்தார் அவர். எனக்கு என்னவென்று புரியவில்லை. சிறிது நேர மௌனத்தின்பின் அவரே சொன்னார் - ''நான் கொலைசெய்துவிட்டேன்''


ஆம், அவர் பாதத்தின் கீழிருந்தது அவ்வடைக்கலாம் குஞ்சு. அடையாளம் காண முடியாதபடி சிதைந்திருந்தது அவ்வுடல். பிழையான கூட்டில் வைக்கப்பட்டதால் அக்குஞ்சு விரட்டியடிக்கப்பட்டதுபோலும்.

வேதனை தாளாத அப்பெண்ணுள்ளம் விம்மியது—கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. ஆறுதல் வார்த்தைகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவரை நோக்கிச் சென்றன.

அறையில் இருந்து ஒரு குரல் கேட்டது—

''பெண்கள் வெளியில் மட்டுமல்ல — வீட்டிலும் குனிந்துதான் நடக்கவேண்டும்''

[வாழ்வில் இதுபோல் நடைபெறும் சிறிய நிகழ்வுகள், பல அரிய சமுதாய, இறையியல் கருத்துக்களைப் போதிக்கும் உங்கள் வாழ்வில் நிகழும் இதுபோன்ற நிகழ்வுகளை எழுதுங்கள். பிரசுரத்துக்கு உகந்ததாயின் பிரசுரிக்கப்படும்.
— ஆ-ர்]



# உலகம் சுற்றி..

## சகோதரன் வில்லிகிரகாம் என்பாரின் மாபெரும் சுவிசேடக கூட்டச் சிறப்பு

கனடாவில் பிரித்தானியக் கொலம்பியா மாகாணத்தின் அழகான நகர் வான்கூவர். இது பசுபிக் சமுத்திரத்திக்கரையில் இருக்கிறது. இங்கு உலகத்திலே உள்ள மேற் கூரையிட்ட பார்ப்போர் அரங்குகள் இரண்டுடன் மிகப் பெரிய ஒரு அரங்குண்டு. ஏறக்குறைய பல மைல் சுற்றளவுள்ள இதற்கு கோப்பிசமில்லாத கூரை உண்டு. அதாவது கற்றடைத்த வலூன் இதன் மேலே கூரையாக உண்டு. இதில் 1 இலட்சத்து 5,000 பேர் உட்கார்ந்து பார்க்கலாம்.

இங்கு ஒக்டோபர் 14 – 21 வரை பெரிய சுவிசேடக் கூட்டம் தினமும் நடந்தது. இரண்டுநாட்கள் போக வசதி கிடைத்தது, இறுதிநாள் ஒரு ஞாயிற்றுக் கிழமையாயிருந்த படியால் சனங்கள் நிரம்பி கர்த்தரின் வார்த்தையை வெளியில் நின்றும் கேட்டனர். அவர் அன்று அந்தக் கூடாரத்தையும், அதன் முகப்பில் அமைந்திருக்கும் நம்பிக்கை ஞாபக சின்னத்தையும் உதாரணமாக எடுத்து கர்த்தரின் வல்லமையையிட்டுப் பேசினுர்.

பல டல்லாயிரக்கணக்காண மக்கள் கூடியிருந்த இடத்தில் எல்லோரும் சேர்ந்து பாடிய போது பெரும் இன்பமாகஇருந்தது. அங்குள்ளவர்களில் அநேகர் நோயாளியாகவும், வலது குறைந்தவர்களாகவும் இருந்தார்கள். பலர் படுக்கையில் இருந்தவாறே கர்த்தரின் வார்த்தைகளைக் கேட்டார்கள். எவரா்வது அங்கு சுகம் பெற்றேம், கண்பார்வை பெற்றேன், கால்முடம் தீர்ந்தது என்று கூறவில்லை. அதற்குப் பதிலாக அவருடைய சுவிசேட வல்லமையால் தினமும் ஆயிரக்கணக்கான புற மதத்தவர்கள் கிறிஸ்துவைத் தமது இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள்.

நான் முன் சொன்னபடி இவ்வரங்கின் முகப்பில் நம்பிக்கையின் ஞாபகச்சின்னமுண்டுஎன்று சொல்னேன் அல்லவா. அது புற்றுநோயால் தனது காலொன்றை இழந்த றெறி பொக்ஸ் என்பவன் புற்றுநோயாளர்க்காக நிதியை திரட்டி அன்பளிப்பாக அளிக்க ஒருநாளைக்கு 26 மைல் வீதம் கனடாவின் கிழக்கிலிருந்து மேற்குப் பக்கம்வரை ஓட முடிவு செய்தான். இடைவழியில் அவன் மரித்தான். ஆயினும் அநேகபணம் சேர்ந்தது. அது இங்குள்ள புற்று நோய் பாராமரிப்புக்கு நியமாக வழங்கப் பட்டது. கனடாவின் அதிஉயர்ந்த தேசிய விருதுகள் எல்லாம் அவனுக்கு வழங்கப்பட்டன. அவன் ஞாபகார்த்தமாக உலகின் ஆகப்பெரிய கூடாரமுள்ள அரங்கின் முகப்பில் ஒரு பளிங்கு மண்டபம் எழுப்பப்பட்டது. இதனைக் கருவாக எடுத்த பில்லி கிரகாம் அவர்கள் நமக்குத்

## இறை + இயல்

Theology என்ற ஆங்கில சொல் இரண்டு கிரேக்க வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டது, Theos - Logia (இறைவன் - வார்த்தைகள் அடங்கிய தொகுப்பு) என்ற இரு வார்த்தைகள்தான் அவை. எனவே இறையியல் என்பது ''இறைவன் பற்றிய வார்த்தைகள் அடங்கிய தொகுப்புத்தான்''.

தந்த முட்கள் நம்மோடிருந்து போகட்டும். எங்கள் ஆத்தும ஓட்டம் தொடங்கட்டும் என்றபோது விசேட இடத்தில் அமர்ந்தும் படுத்தும் கொண்டிருந்த பிணியாளர்கள் உன்னதப் பாட்டை பாடினர்.

கனடாவிற்கு வந்து நான் சென்று பார்த்த இந்த சுவிசேடக் கூட்டம் வெகுவான முன் மாதிரியாக இருந்தது. இதற்கு நன்கொடைக் காணிக்கையாகச் சேர்ந்த ஒருபகுதி சுவிசேட ஊழியத்தை தொலைக்காட்சியில் ஒலிபரப்பப் போக மீதி வறுமையால்வாடும் மக்களுக்கு வாழ்வழிக்க உபயோகிக்கப்படும். இங்கு வருவோர் கொண்டு சேர்ந்த பல டிரோலி வண்டிகள் நிறைந்த உணவுகள் பட்டினியால் வாடும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

ஈற்றில் உலகின் பெரிய கூடார அரங்கில் நாம் நிறைந்திருக்கும்போது இப்படி மகிழ்ந்தால், மனநிறைவுற்றால் கர்த்தரின் மகா பெரிய கூடாரத்தில் கூடும்போது எப்படி மகிழ்வோம் என்று பில்லிகிராம் சகோதரன் கேட்ட கேள்வியை உங்களுடன் பகிர்ந்துகொண்டு விடைபெறுறேன்.

— திருமதி பசுபதி செல்வராஜகோபால்,
கனடா.

* * *

## சர்வதேச இளைஞர் ஆண்டு 1985

அடுத்தவருடம் (1985) சர்வதேச இளைஞர் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நியுசிலாந்து பப்திஸ்த திருச்சபையின் இளைஞர் குழுக்கள் இப்போதே அடுத்த ஆண்டுக்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யத் தொடங்கி விட்டன.

மேற்படி சபையின் 60 பேரடங்கிய இளைஞர்குழுவொன்று கூடி பின்வரும் அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிட்டனர்.

"சிலந்திக் கூடுகளை துப்பரவுசெய்த காலம் அகன்று சிலந்தியையே கொன்றொழிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. பிளவுபட்ட இல்லங்கள், வறுமை, பணம் அபகரித்தல் ஆகிய இவைதான் சிலந்திக்கூடுகள் என்றால்;— எனது விருப்பங்கள்! எனது உரிமைகள்! எனது தேவைகள்! எனது சொத்துக்கள் என்னும் 'நான்' (Me'ism) தான் அந்தக் கொடுமையான சிலந்தி.

இதுவரை முக்கியமானதை விட்டுவிட்டு முக்கியமற்றவைகளையே நாம் வளர்த்து வந்திருக்கிறோம். இவ்வுலகம் பட்டினியை ஒழிக்கத் தேவையான உணவை உற்பத்தி செய்கின்றது. ஆனாலும் பட்டினியை ஒழிக்க முடியவில்லை. காரணம், பேராசை, பூரணமற்ற அரசியல் திட்டங்கள், ஆயுதம் தரித்தோரின் அறமற்ற செயற்பாடுகள் – முக்கியமற்றவைகள் இவைகளே! எனவே இளைஞர்கள் தமது வாழ்க்கை முறையைமாற்றி அமைக்கவேண்டும்! 'நான்' என்னும் நிலையிலிருந்து விடுபடவேண்டும்! ஒருநாள் ஊதியத்தையாவது இவ்வுலகின் பட்டினியை ஒழிப்பதற்காக கொடுக்கவேண்டும்! எமது தத்துவம் பின்வருகிறபடி எளிய ஒன்றாக அமையட்டும். 'எளிமையாக வாழுக! – மற்றவர்கள் உயிர் பிழைப்பதற்காக'.


சர்வதேச இளைஞர் ஆண்டு - இலங்கையிலும்தான்! நாம் என்ன திட்டங்கள் வைத்திருக்கின்றோம்?

நன்றி –
'YOUTH' Sep:emper 1984

## றெபேட் டி நொபிலி

16ம் நூற்றாண்டில் வாழ்ந்த இயேசு சபையைச் (Jesuit) சேர்ந்த நொபிலி என்பவர்தான் மேல்நாட்டு இறையியலுக்கு எதிரான போராட்டத்தை முதன்முதலில் நிகழ்த்தியவராவார். அவர் பூணூல் அணிந்து, குல அடையாளமுமிட்டு அசல் பிராமணரைப் போலவே வாழ்ந்தார். நற்செய்தியை சமஸ்கிருத மொழியில் மொழிபெயர்த்து 'ஐந்தாவது வேதம்' என்று வெளியிட்டார். இந்து சமயத்தில் வழக்கிலுள்ள சில அடையாளங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தையும், இறையியலையும் வெளிப்படுத்தக்கூடியன என்று அவர் உணர்ந்ததனாலேயே இவைகளைச் செய்தார்.

— கிறிஸ்தவ நம்பிக்கையும்,
தற்கால விளக்கங்களும்
என்ற நூலிலிருந்து.



# வாழ்வும் வீழ்வும்!

விசுவாசிக்கு வாழ்வு ஓர்விழிப்பு
விகடருக்கு அதுஓர் விளையாட்டு
விண்ணோருக்கு வாழ்வோர் எழுப்புதல்
வீணருக்கு அதுவோர் சோம்பல்.

உழைப்பாளிக்கு வாழ்வோர் வேலை
உலுத்தர்க்கு அதுவொரு தொல்லை
உழவனுக்கு வாழ்வோர் ஏர்
உறங்குவோர்க்கு அதுவொரு படுக்கை.

கற்றுத்தரும் ஆசானுக்கோர் கல்விக்கூடம்
கஞ்சனுக்கு அதுவோர் பணக்கூடம்
கடமையாளருக்கு வாழ்வோர் கட்டளை
கயவர்க்கு அதுவோர் கன்னக்கோல்.

சிற்பிக்கு அதுவோர் கலைக்கூடம்
சிந்தனையாளருக்கு அதுவோர் கவிக்கூடம்
நிந்தனையாளருக்கு அதுவோர் பலிபீடம்
நீசர்களுக்கோ அதுவோர் சிறைக்கூடம்.

போதகருக்கு வாழ்வோர் பிரசங்கம்
போலிகளுக்கு அதுவோர் வெறும்பதவி
நல்லோர்க்கு வாழ்வோர் வாழ்க்கை
நண்பரே! உங்களுக்கு வாழ்வு என்ன?

— பா. கிரான் ஜீவன்

**கடந்த இதழ் சிறுகதையின் முடிவு**

# "பிள்ளை மனம் பித்தானால்......"



ஏதோ தீர்மானித்தவனாக வீட்டை நோக்கி நடக்கிறான் ரவி.

அவன் தாய்மீது வைத்திருந்த அன்புவெறி இப்போது கொலை வெறியாகவே மாறிவிட்டிருந்தது. ஆம் அவனுள் அவன் எடுத்திருந்த தீர்மானம் அதுதான். தூக்க மாத்திரைகளை அவளுக்கு அதிகமாகக் கொடுத்து... அமைதியாக, அடக்கமாக, தன் தூக்கத்திலேயே இவ்வுலகில் இருந்து 'அவளை விடைபெற வைக்க வேண்டும்.... இதனால் இவ்வுலகம் என்னைக் கொலைகாரனாக்கி, எனக்கு மரண தண்டனை விதித்தாலும் பரவாயில்லை.

பித்தேறிய தலையோடு அவன் வீட்டை நெருங்கியபோது — திடீரென

ஐயோ...! அம்மா...! அம்மா... என் அன்புத் தெய்வமே!...

என்ற அவலக்குரல் தாக்கியது. அவன் சந்தேகித்தது போலவே அது அவன் தங்கை நிமலியின் குரலேதான். அவனும்

ஐயோ...! அம்மா...! எனக் கத்திக்கொண்டே வீட்டினுள் பாய்ந்தான். அங்கு அவன்கண்ட காட்சி அவனை நிலைகுலைய வைத்தது.

தன் அன்பு மகனைக் கொலைகாரனாக்கக் கூடாது என்று அந்த அன்புத் தாயுள்ளம் நினைத்ததோ என்னவோ! 'இருப்பது பொய் இறப்பது மெய்' எனும் தத்துவத்திற்கிணங்க தன் அன்புக் குழந்தைகளின் அன்பை மறந்தவளாக தன் மனதைக் கல்லாக்கிக்கொண்டு கண்மூடி, மரணதேவதையின் அணைப்பில் சிக்கியிருந்தாள் அவள். அம்மா...! என்ற ஓலத்துடன்... தாயின் கால்களைக் கட்டிக்கொண்டே கட்டிலில் தன் தலையை மோதத் தொடங்கினான் ரவி.

பெற்றமனம் கல்லாக இறுகிக் கிடப்பதையும், பிள்ளைமனம் பித்தாகிப் புலம்புவதையும் தான் சத்தம்கேட்டு உள்ளேவந்த அயலவர்கள் கண்டனர்.

(முற்றும்)

பின்வருவோர் செல்வி சுகிர்தராணி சின்னத்தம்பி கடந்த இதழில் எழுதியிருந்த 'பிள்ளை மனம் பித்தானால்' கதையின் முடிவை எழுதியிருந்தனர்.

செல்வி சுதா தம்பிராஜா, துறைநீலாவணை.
செல்வி வசுமதி சிவபாதம், மட்டக்களப்பு.
திரு. ஜெ. செல்வராஜா, கல்லாறு.
செல்வி கி. கிருபைதாசன், திருமலை.
திரு. ந. செல்வரெத்தினம், கல்லாறு.
திரு. அ. ஜெபனேசன், கொழும்பு.

இவர்களுக்கு எமது நன்றியும் பாராட்டுக்களும் உரித்தாகுக!

நினைவுத் திரையில்......



## ஆறுவது ஆண்டு நினைவஞ்சலி

**டாக்டர் டேவிட் தேவராஜா இராசையா**

செங்கலடி

பிறப்பு : **10-07-1929.** இறப்பு : **04-12-1978**

''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' —(யோவான் 11 : 25, 26)

'பிள்ளை மனம் பித்தானால்...'' கதையின் முடிவை எழுதி ஒரு மெதடித்த பாட்டுப்புத்தகம் பரிசாகப் பெறுபவர்:

செல்வி நவநீதா காத்தமுத்து,
7ம் வட்டாரம், துறைநீலாவணை.

இப்பரிசு காலம்சென்ற திரு. டாக்டர். டேவிட் தேவராஜா இராசையா அவர்களின் நினைவாக வழங்கப்படுகிறது.

இப்போட்டியில் பாராட்டுப் பெறுபவர் :—
திரு. ஜெ. செல்வராஜ், ஓடக்கரை வீதி, கல்லாறு.

# இயேசு இன்று வந்தால்......


இயேசு ஒருநாள் உலகில்வந்து ஒரு தெருவில் நடந்துசென்றுகொண்டிருந்தார். எவரும் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனால் ஒரு 20ம் நூற்றாண்டு இறையியலாளர் ஒருவர் அவரை அடையாளம் கண்டுகொண்டார். இயேசு கேட்டார் ''எவருமே என்னை அடையாளம் காணவில்லை — ஆனால் நீங்கள் அடையாளம் கண்டுகொண்டீர்களே ?'' அவர் சொன்னார் - ''அதென்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள். உங்களை அக்கு வேறாக, ஆணி வேறாக எனக்குத் தெரியும். உங்களைப்பற்றியே 10 புத்தகம் எழுதியிருக்கிறேன்.''

''அதுசரி! இந்த உலக மக்கள் என்னை யாரென்று சொல்கிறார்கள்'' இயேசு கேட்டார். 'பலரும் பலவிதமாகத் தங்கள் தங்கள் வசதிக்கேற்றபடி சொல்லிக்கொள்வார்கள். சுகமளிப்பவர், விடுதலை அளிப்பவர், ஒடுக்கப்பட்டவர்களின் நண்பன், இப்படியெல்லாம் சொல்வார்கள்'' என்றார் இறையியலாளர். ''நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?'' இயேசு கேட்டார்.

ஒருமுறை செருமிக்கொண்டு இறையியலாளர் சொல்லத்தொடங்கினார் -

''உங்களைப்பற்றிக் கூறும்போது, விசுவாச சமுதாயத்தினர் அனுபவித்து அறிக்கையிடுகின்ற விசுவாசத்தின் அடிப்படை, உள்ளடக்கம், பலாபலன்கள் ஆகியவற்றைப்பற்றிய தெளிவான இசைவான கருத்துரைகளை கட்டுக்கோப்பான ரீதியில், கிறிஸ்தவ உண்மைகளை இயல்பூக்க கருத்துருவங்களாக, அமைப்புக்களாக அல்லது முழு உருவக் காட்சிகளாக; ஆனால் தனிப்பட்ட கருத்துருவ வரையறைச் சட்டத்தினுள் .......''

இயேசு மயங்கி விழுந்துவிட்டார்.




— அல்பா —

★ கே : இலங்கையின் தமிழ் 'மக்களுக்கு இப்போது தேவையானது விடுதலையா? மனச் சமாதானமா?

— T. நிதர்ஷன் – கல்முனை.

ப : எமது சூழ்நிலையில் நீங்கள் கேட்கும் இரண்டு தத்துவங்களும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து நிற்பவையாகத்தான் நான் காண்கிறேன்.

★ கே : மத். 21:7ல் ''கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து அவைகளின்மேல்... அவரை ஏற்றினார்கள்'' எனக் கூறப்படுகிறது. ஆண்டவர் இரண்டிலும் பவனி சென்றாரா?

— H. R. டானியல் – அக்கரைப்பற்று.

ப : மாற்கு 11; லூக். 19; யோ. 12 அதிகாரங்களில் பாருங்கள் குட்டியை மட்டுமே சந்திப்பீர்கள்! உங்களுக்கு ஓர் ஆலோசனை சொல்கிறேன்; திருமறையை நல்லமுறையில் படிக்கவேண்டுமானால் இப்படிப்பட்ட மேலெழுந்தவாரியான கேள்விகளை விட்டுவிடுங்கள்!

★ கே : பல கட்டுக்கோப்புகளுள்ள திருச்சபையில் - சுயாதீனமாகச் செயல்படும் பரிசுத்தாவியானவர் செயற்படமுடியுமா?

— P. யோசப் – கொழும்பு.

ப : பரிசுத்தாவியானவரின் செயற்பாட்டுக்குத் திருச்சபையின் சட்டங்கள் தடையல்ல. (ஆதித்) திருச்சபையில் சட்டங்களை உருவாக்க உதவியவரே ஆவியானவர்தானே!


★ கே : வெளிநாடுகளுக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் செல்லும் ஊழியக்காரர்களால் திருச்சபைக்குப் பயனுண்டா?

ப : செல்பவர்களை விட்டுவிடுங்கள்! திரும்பியவர்கள் நல்லபணி செய்வதை நீங்கள் காணவில்லையா?

## பிழை திருத்தம்

கடந்த இதழில் (புரட்டாதி / ஐப்பசி) புதிய திருமாவட்ட அவைத் தலைவர் அடுத்த திருமாவட்ட அவைக் கூட்டத் தொடரின்போது பொறுப்பேற்பார் எனக் குறிப்பிடப்பட்டது தவறாகும். புதிய திருமாவட்ட அவைத் தலைவர் 1986ம ஆண்டு தைமாதம் முதல திருமாவட்ட அவைப பணியைப் பொறுப்பேற்றுக்கொள்வார்.

(மேற்படி தவறுக்கு வருந்துகிறோம் —ஆ-ர்)



# ஆனால் அதை என்னால் நம்பமுடியவில்லை !

— அருட்திரு.
யோசுவா இரத்தினம்.

நம்பமுடியாத கதை.

கன்னி வயிற்றில் கருவா ?

காபிரியேல் வெறும் கனவா ? இல்லை நனவா ?

வானம் கானம் இசைத்ததாம்: நம்பமுடியுமா?

அரசர்கள் மாட்டுக்கொட்டிலில் மண்டியிட்ட கதை எப்போதாவது நடந்திருக்கிறதா ?

நம்பமுடியாத கதை !

ஆம், இறைவன் ஒரு மனிதனாகப் பிறக்கின்றான்; ஏழையாகப் பிறக்கின்றான்.

அரச பதவியும் அசுரப் பலமுமின்றிய சாதாரண மனிதனாகப் பிறக்கின்றான்.

உலகமாந்தரின் முடிவையே நிர்ணயிக்கும் நிலுவையைக் கையில் வைத்திருக்கும் அந்த இறைவன் சிலுவையில் மரிக்க சிசுவாகப் பிறக்கின்றான்.

எவர்தான் இந்த உண்மையை நம்பலாம் ?

நம்ப விரும்பினாலும் உண்மையாகவே இது நிகழக்கூடியதுதானா ?

ஆம், உண்மையாகவே நடந்தாலும் நம்ப முடியாமல் மெய்சிலிர்த்துத் திகைக்கும் கதைதான் இந்தக் கதை.

நம் நினைவுகளையெல்லாம் விஞ்சும் ஓர் நிகழ்வு நிகழும்போது அது புராணத்தன்மை (Mythical) பெறுகிறது.

அந்தப் பேருண்மையை வர்ணிக்கப் புகும்போது வார்த்தைகள் ஆடையில்லாப் பிச்சைக்காரர்களாகத்தான் தோன்றுகின்றன.

இருந்தாலும் அதை சொல்லிவைக்கும்போது அது நம்பமுடியாத கதையாகத்தான் தொனிக்கின்றது.

அப்படித்தானே அது தொனிக்கவேண்டும்!

இயற்கை வரையறைகளை மீறிக்கொண்டு, மனித எண்ணங்களைக் கடந்துகொண்டு சொல்லப்படும் இந்தக்கதை சொல்லவரும் உண்மை என்ன ?

அசாத்தியமானது சாத்தியமாகியிருக்கிறது என்பதுதான் !

இறைவன் உலகிற்குள்ளே, மனித சரித்திரத்திற்குள்ளே பிரவேசித்துவிட்டான், பிறந்துவிட்டான், தன்னைக் கையளித்துவிட்டான் என்பதுதான் அந்த உண்மை.

இறைவன்தான் மனித உலகிற்குள் நுழைகின்றானே தவிர, மனித உலகம் இறைவனை இங்கு உருவாக்கவில்லை என்பதே இந்தக் கதையின் பேருண்மை.

இந்த மறைபொருள்தான் (Mystery) திருஅவதாரம் (Incarnation).

இந்த நம்பிக்கைதான் கிறிஸ்தவ விசுவாசத்தின் அச்சாணி.

இதை நீங்கள் நம்புகிறீர்களா ?

''இது ஒரு விரைவு மாறுதலின் யுகம்''. நமது நம்பிக்கை மக்களுக்கு வாழ்வழிக்கும் முறையில் பயன்படவேண்டுமானால், காலத்துக்கு ஏற்றவாறு மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய புதுக் கருத்துப் படிவங்கள்மூலம் விளக்கப்படுவது இன்றியமையாதது ஆகும்''

— ஞான. இருபின்சன்.



# ஊர்வலம்

## பரீட்சைகள்! பரீட்சைகள்!

இம்முறை வட/கிழ திருமாவட்ட அவைப் பரீட்சைகளை அந்தந்த சேகரங்களே பொறுப்பேற்று நடத்தும். பரிசுகளுக்காக திருமாவட்ட அவைத்தலைவர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இப்பரீட்சைகள் யாவும் சிறப்புற நடந்தேறட்டும்! ஆனால் எமது ஓய்வுநாட் பாடசாலைப் பணியின் முக்கியநோக்கு பரீட்சைகளை நடாத்தி முடிப்பதாக யாரும் எண்ணாமல் இருக்கட்டும். காரணம், ஓய்வுநாட் பாடசாலைப் பணியின் நிறைவு பரீட்சைகள் அல்ல. அது சிறுவர்களின் திருமறை, சமுதாய அறிவே!

●

## பாடவிதானம் - 1985

1985ம் ஆண்டுக்கான ஓய்வுநாட் பாடசாலை பாடவிதானம் தை மாதத்தில் எல்லாச் சேகரங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று ஓ. நா. பாடசாலை செயலாளர் கூறுகிறார். எங்கள் சபை சிறிய சபையானாலும், சிறிய ஓர் ஓய்வுநாட் பாடசாலையாவது நடக்கட்டும். சபையில் உயிர் இருப்பதை எடுத்துக்காட்டும் ஓர் அடையாளம்தான் ஓ. நா. பாடசாலை.

●

## பொத்துவிலில் - கருத்தரங்கு

திருக்கோவில் சேகர — ஸ்தானப் பிரசங்கிமார் கருத்தரங்கொன்று கடந்த மாதம் பொத்துவிலில் நடைபெற்றது. திரு. முத்தையா இரத்தினம் முக்கிய தலைவராகக் கலந்து கொண்டார். மிக மிக சிறந்த முறையில் இக் கருத்தரங்கு நடைபெற்றதாக அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. 'அனுபவப் பழம்' இரத்தினம் கலந்துகொண்டால் வேறென்ன? கேட்கவா வேண்டும்.

●

## பாழாய்ப்போன.....

கல்லாறு — கல்முனைச் சேகர வாலிபர் கழகங்கள் வருடாவருடம் நடத்தும் விவாத அரங்கு இவ்வருடம் நிறைவேறாமல் போய் விட்டது. பாழாப்போன ஊரடங்குச்சட்டம் 22ம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டதால் விவாத அரங்கு பாழாக்கப்பட்டுவிட்டது.

●

## மறுமலர்ச்சி!

மெதடிஸ்த திரு அவையில் "ஆவிக்குரிய மறுமலர்ச்சி" அவசியம் எனப் பல காலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இதன் முன்னோடி நிகழ்ச்சியாக கடந்த கார்த்திகை 17, 18ல் கடலான 'தெவ் சுவ சேவா' இல்லத்தில் ஓர் சிறப்பான பாசறை நடைபெற்றது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்த பிரதிநிதிகள் இப்பாசறையில் கலந்து கொண்டனர். இப்பாசறை ஒரு வெற்றியாகவே முடிந்தது எனலாம். இதில் பங்குகொண்ட ஜம்பெற்று சபையைச் சேர்ந்த 'எரிக்' பின்வருமாறு

[26ம் பக்கம் பார்க்கவும்]

## தூயவர் அணிநடை செல்கையில்



# பரமசிவம் பசில் இராஜசிங்கம்

— அருட்திரு. H. R. S. ஜெயசந்திரன்

இலங்கை மெதடிஸ்த திருச்சபை ஊழியத்தில் இருந்து இளைப்பாறி, அதை அனுபவிக்குமுன் இப்புவி வாழ்வில் இருந்து ஓய்வுபெற்று இயேசுபெருமான் திருவடிகளண்டை, அவரை இரவுபகலாக பூசை செய்வதற்காக எமது மகாசங்க முன்னாள் தலைவரவர்கள் 1984 ஒக்டோபர் மாதம் 4ம் தேதியன்று சென்றடைந்தார்கள். இவருடைய மரண ஆராதனை ஒக்டோபர் 8ம் தேதி, ஆயிரக்கணக்கான அன்பர்களால் நடாத்தி வைக்கப்பட்டது. இவ்வளவு விரைவாக இக் கூடாரச் சீவியம் முடிந்து நித்திய சீவியம் துவங்கிவிடும் என்று, இவ்விறையடியானோ அல்லது சபைமக்களோ எதிர்பார்த்திருக்கவில்லை.

நாவலப்பிட்டிக்கு அருகாமையிலுள்ள கம்புக்பிட்டியா என்ற சிற்றூரில் 1918 வைகாசி 17ம் தேதி பிறந்த அருட்திரு. இராஜசிங்கம் அவர்கள் 1946ம் ஆண்டு எமது சபை ஊழியத்திற்கு என்று தம்மை ஒப்புக்கொடுத்தார். கடந்துபோன 38 வருடகால திருச்சபை ஊழியத்தில் ஐந்து சேகரங்களில் சிறந்த ஊழியம் செய்தார். 1964 – 1968 காலப் பகுதியில் மத்திய சபா சங்கத் தலைவராகவும், 1972 – 1976 காலப்பகுதியில் தெற்கு சபா சங்கத் தலைவராகவும், 1976 – 1980 காலப் பகுதியில் மகாசங்கத் தலைவராகவும் சிறந்த சேவை செய்தனர். கலாநிதி நைல்ஸ் அவர்களுக்குப்பின் அகில உலகமும் சுற்றித்திரிந்து இறைப்பணி செய்த சிறப்பு இவரையே சாரும். இவருடைய மகாசங்க தலைமைக் காலத்தில் இலங்கை மெதடிஸ்த சபை மறுமலர்ச்சியுற்றது எனக் கூறினால் அது மிகையாகாது. கடவுளின் ஆவியானவர் வழிகாட்ட தீர்க்கனாய் ஆலோசனை கூறி, ஆண்டவர் அன்பின் பாதையில் திருச்சபை வாழ்வை திசைமாற்றினார். நைந்து போய், இனி தலையெடுக்க முடியாது என்றிருந்த திருச்சபை நிதிநிலையை பலப்படுத்தி, விசுவாசத்தால் எல்லாம் ஆகும் என நிரூபித்துக்காட்டினார்.

ஆரம்ப காலத்தில் துன்பம் மிகுந்த வாழ்க்கை வாழ்ந்தவர், படிப்படியாய் உயர்ந்தவர், பண்பால் சிறந்தவர், திருமறையை வழிகொண்டு தன் அனுதின ஜெப சீவியத்தால் தன்னலங்கருதா ஊழியம் செய்தவர். நிர்

### இறையியல் = திருமறை + நம்பிக்கை + அனுபவம்

இறையியலுக்கு மேற்கூறிய மூன்றும் முக்கியமானவை; திருமறை உண்மைகளை அடிப்படையாகவும், எமது நம்பிக்கையை அளவுகோலாகவும் கொண்டு, எமது நாளாந்த அனுபவத்திலிருந்து எழும் இறைவன்பற்றிய எண்ணங்கள்தான்–இறையியல்.

வாகத்தில் சிறந்தவர், சிறியோரும் பெரியோரும் — கற்றவரும் கல்லாதோரும் புரிந்துகொள்ளும் வண்ணம் அருளுரைகள் அருளியவர், தனிமனிதனிடத்தில் கரிசனையோடு அன்பு காட்டியவர், வாலிப ஊழியருக்கு அருட்தந்தை; அவர் சிறப்புகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இவர் ஊழியம் செய்த சபை/சேகர மக்கள் இவரை மிகவும் நேசித்தனர், அது போன்று இவரும் வீடுவீடாய் சென்று மக்கள் இதயத்திலும் குடிபுகுந்தார். அகில இலங்கை சினட்சங்க வாலிப ஊழிய செயலாளராய் இவர் கடைமையாற்றிய காலத்தைப்போன்று வாலிப ஊழியம் எக்காலத்திலும் சிறந்து விளங்கவில்லை எனக்கூறுவர் இவருடைய ஆழ்ந்த திருமறையறிவின் (7ம் நாட்காரர் பின்னணி) காரணமாக கடந்த மூன்றாண்டு காலமாக இலங்கை வேதாகம சங்க பொதுச் செயலாளராக சிறந்த தொண்டு செய்தனர். ஜெர்மனிதேசத்தில் இயங்கும் KNH ஸ்தாபனத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தி ஏழைச் சிறுவர்களுக்கு வழிகாட்டிய வித்தகர்.

இதை எழுதுகிற என்னுடைய திருப்பணி எந்தவகையிலாவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாய் இருந்தால், அதற்கு நான் அருட்திரு. இராஜசிங்கம் அவர்களுக்கு மூன்று வருடகாலம் உதவிக் குருவானவராக இருந்த காலத்தில் கற்றுக்கொண்டவைகளே காரணங்களாகும். இவ்விதமாய் இவருடைய சிறப்புகளை எழுதிக்கொண்டே போகலாம்; எல்லாவற்றையும் அடக்குவதற்கு ஒரு இதழ் தொடுவானம் போதாது.

1984ம் ஆண்டு திருப்பேரவை இவருடைய ஓய்வை அங்கீகரித்தது. தமது அருமைப் பிள்ளைகளோடு சீவிக்கவும், ஊழியத்தைத் தொடர்ந்து செய்யவும், 1985 ஜனவரிமாதம் அவுஸ்திரேலியா நாடு செல்வதற்கும் ஆயத்தமாய் இருந்தார்; ஆனால் ஆண்டவருடைய சித்தமோ வேறுவிதமாய் அமைந்துவிட்டது. திருச்சபை ஒரு பெருந்தீர்க்கனை இழந்துநிற்கின்றது, அன்பும் பாசமும் கொண்ட கணவனை தகப்பனை அவருடைய மனைவி குளோரி அவர்களும், பிள்ளைகள் ராஜா, ராணி அவர்களும், தனது ஆசானும் தோழனுமாகிய பாட்டனை அவருடைய பேரப்பிள்ளையும் இழந்துநிற்கின்றனர். இவர்கள் யாவருக்கும் இறைவனுடைய ஆறுதலும் சமாதானமும் நிறைவாய்க் கிடைப்பதாக.

# கிழக்கு இறையியல்

தற்போதைய எமது இறையியல் ஆதிக்கம் இன்னும் மேற்கத்திய இறயியல் சார்ந்ததாகவே உள்ளது. எமது இறையியல் கிழக்கு பாரம்பரியம் சார்ந்ததாக இருக்கவேண்டும் என்ற முயற்சியில் 'கிழக்கு இறையியலை' ஆக்குவதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் இந்தியாவைச் சேர்ந்த V. சர்க்கரைச் செட்டியார், P. செஞ்சையா ஆகியோராவார். இவர்களுடைய முக்கிய நோக்கு இந்திய தத்துவங்களினூடாக இறையியல் உண்மைகளை வெளிப்படுத்தியமை ஆகும்.

## ஊர்வலம்......

[24ம் பக்கத் தொடர்ச்சி]

கூறுகிறார். 'நமது சபைக்கு ஆவிக்குரிய மறுமலர்ச்சி அவசியம். இங்கிலாந்தின் வெறுமையான ஆலயங்களைக் கேள்விப்படும்போது அதே நிலை எமக்கும் வரக்கூடாது என எண்ணுகின்றோம். எமது ஆலயங்களை வெறும் கற்களால் அல்ல, மனிதர்களால் கட்டி எழுப்புவோமாக'

## நிதியைப் பெருக்கிய தலைவர்

எமது முன்னைநாள் திருப்பேரவைத் தலைவர் அருட்திரு. P. B. இராஜசிங்கம் கடந்த 4-10-84ல் இறைவன் திருவடி சேர்ந்தார்கள். மெதடித்த திரு அவையின் நிதி நிலையை சீராக்கும் முயற்சியில் பாடுபட்டு வெற்றிகண்ட பெருமை அன்னாருக்கு உண்டு. அன்னாரின் குடும்பத்தவர்கட்கு அவர்களின் இவ் ஈடில்லாப் பேரிழப்பில் 'தொடுவானம்' தன் ஆழந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

# புது வருடம் காண்போம்!

**1**

''ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம்பொருளின் இலக்கை நோக்கித் தொடருகின்றேன்'' (பிலிப்பியர் 3 : 13, 14)

**(அவரைத் தொடருவோம்)**

**9**

''அப்பொழுது இயேசு, சுத்தமானவர்கள் பத்துப்பேரல்லவா? மற்ற ஒன்பதுபேர் எங்கே? திரும்பிவந்து கடவுளுக்கு நன்றி செலுத்த இந்த அந்நியனைத் தவிர வேறு ஒருவரையும் காணோமே!'' (லூக். 17 : 17, 18)

**(அவருக்கு நன்றி செலுத்துவோம்)**

**8**

''எட்டு நாளுக்குப்பின் அவருடைய சீடர்கள் முன்போலவே வீட்டிற்குள் இருந்தார்கள். அவர்களோடு தோமாவும் இருந்தார். கதவுகள் தாழிடப்பட்டிருந்தன. அப்பொழுது இயேசு வந்து அவர்களிடையே நின்று 'உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக' என்றார். (யோ. 21:26)

**(அவர் நமக்கு சமாதானமளிப்பார்)**

**5**

''பின்பு அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து ஆசீர்வதித்து அப்பங்களைப் பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்'' (மத்தேயு 14 : 19)

**(நம் தேவைகளை நிறைவேற்றுவார்)**

---

அவரைத் தொடருவோம் !
அவருக்கு நன்றி செலுத்துவோம் !!
அவர் நமக்கு சமாதானமளிப்பார் !!!
நம் தேவைகளை நிறைவேற்றுவார் !!!!

---

தொகுப்பு : **மிஸ் தேவசாந்தினி வசிகரன்**

மேலிருந்து கீழ்

1. பவுல் தாம் இப்பட்டணத்தில் பாடுபட்டு நிந்தையடைந்ததாகக் கூறுகிறார்.
3. நான் மந்தையின் பின்னாலே போகும் போது கர்த்தர் என்னை அழைத்தார் எனக் குழம்பிக்கிடக்கும் இந்தத் தீர்க்கர் கூறுகிறார்.
10. பவுலின் சீடனான காயூ இந்த ஊரைச் சேர்ந்தவர்.
15. நியாயமானதைச் செய்வதை விட்டு விட்டு வெந்தயத்திலும் சீரகத்திலும் இதனைக் கொடுக்கும் பரிசேயரை இயேசு கண்டிக்கிறார்.
17. மறுமலித்துவிட்டேன் என்றோ என்னவோ இவர் குழம்பிக்கிடக்கிறார்.
29. இதன் செய்திகளையும் கேட்கப்போகிறீர்கள். ஆனாலும் கலங்கவேண்டாம் என்று இயேசு கூறுகிறார்.
32. பஞ்சாகமங்களிலொன்று குழம்பிவிட்டதே.
43. பிரியமான வைத்தியன் என்று இவரைப் பவுல் அழைக்கிறார்.
50. இயேசுவிடம் இரவில் வந்தவர்.
51. ஒரு கிறிஸ்தவனுக்குக் குழம்பிக்கிடக்கும் இதில் நம்பிக்கை இருக்கமுடியாது.
76. இதனைப் பிசைதல் இரத்தத்தைப் பிறப்பிக்கும் அப்படியே கோபத்தைக் கிண்டி விடுதல் சண்டையைப் பிறப்பிக்கும்.
88. இயேசு அழைத்தபோது தலைகீழாகக் கிடக்கும் இவைகளையும் விட்டுவிட்டுச் சீடர்கள் பின்சென்றார்களாம்.

●

## நிபந்தனைகள் :

1. போட்டியில் எவரும் பங்குபற்றலாம்.
2. பதில்கள் காணப்படும் திருமறைப் பகுதிகளும் இயன்ற அளவு பிரிதொரு தாளில் குறித்து அனுப்பப்படுமாயின் பரிசு வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும்
3. அனுப்பும் உறையின் இடது மூலையில் 'குறுக்கெழுத்துப் போட்டி - 5' என்று குறிக்கவும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

## 'தொடுவானம்' குறுக்கெழுத்துப் போட்டி — 5 சரியான விடைகள்

இடமிருந்து வலம்

1. அம்மினதாப்
8. ரிதாஊ (ஊதாரி)
11. க்ச்பூம்சகர (பூச்சக்கரம்)
35. ழ்கூ (கூழ்)
41. ஸ்தர்எ (எஸ்தர்)
46. ம்கமிலோ (லோகம்மி)
61. ம்மரக்ராப (பராக்ரமம்)
71. பர்ப்காவ (காப்பவர்)
84. னுன்ம (மன்னு)
88. மம்ன (மனம்)
92. ஆதி
96. சத்துவம்.


மேலிருந்து கீழ்

1. அக்கினிஸ்தம்பம்
3. மிபூ (பூமி)
4. னம்தா (தானம்)
6. ப்கநகூம்ர்ப (கப்பர்நகூம்)
10. ஊசியின்
28. ல்காமிக்ள் (மில்க்காள்)
32. உதத்மர் (உத்தமர்)
44. எல்க்கானு
60. சொப்பனம்
69. ம்சம்வ (வம்சம்)
88. மது.

## இறையியலின் தந்தை

எமது கிறிஸ்தவ இறையியலின் தந்தை யார்? - பவுல் அடிகளார்தான். அவரது கடிதங்களைப் படிக்கும்போது இது புரியும். கிறிஸ்துவைப் பூரணமாக ஏற்றுக்கொண்ட நிலையில் — அன்றைய சமுதாய, அரசியல், பொருளாதார அனுபவங்களைப் பின்னணியாகக்கொண்டு அவரது உள்ளத்திலிருந்து தெறித்த இறையியல் முத்துக்கள்தான் அவரது கடிதங்கள்.

# 'தொடுவானம் குறுக்கெழுத்துப் போட்டி - 6




மொத்தப் பரிசு : ரூ. 180/-
போட்டி முடிவுத் திகதி : 30-1-85.
அனுப்பவேண்டிய முகவரி :
'தொடுவானம்'
மெதடிஸ்த ஒருமனை, கல்லாறு - கி. மா.

பெயர் : ..........................................
விலாசம் : ..........................................
(தெளிவாக எழுதவும்)

— — — — — — — — இங்கே வெட்டவும் — — — — — — — —

**இடமிருந்து வலம்**

1. அடிமையாகிய ஒனெசிமுவின் எஜமானனுகிய இவருடைய வீட்டில் ஒரு சபை கூடுவது வழக்கம்.

8. பிலிப்பு இந்தத் திசையாய்ப் போகும்படி தூதனுல் பணிக்கப்பட்டான் (தலைகீழ்)

23. இவர்களே பகிர்ந்து வாழ்தலின் முன்னேடிகளாவர்.

42. திருமறையில் ஒரே ஒரு அதிகாரத்தில் மட்டும் காணப்படும் இச்சொல்லின் கருத்து 'ஆண்டவரைப் புகழுக' (தலைகீழ்)

49. அந்தத் தீர்க்கதரிசியின் சொற் கேளாதவன் எவனே அவன் ஜனத்திலிராதபடி ——மூலமாக்கப்படுவான் என்று பேதுரு பிரசங்கிக்கிறுர். (தலைகீழ்)

55. கானகத்தில் கூப்பிடுகிறவனுடைய —— என்று ஏசாயாவால் அழைக்கப்பட்டவர், யோவான்;

61. கடவுள் தலைகீழாகக் கிடக்கும் இதன் குஞ்சுகளுக்குக்கூட ஆகாரம் கொடுக்கிறவராயிருக்கிறுர்.

67. பவுல் தனது இரண்டாவது பயணத்தில் சென்ற ஒரு நகரம் — அன்று தலைகீழாகக் கிடந்த இது இங்கும் அப்படித்தான் கிடக்கிறது.

74. ——— ஆண்டுகள் கடந்தபின்னர் நான் கோபாவை (பேதுரு)க் கண்டுபேச எருசலேமுக்குச் சென்றேன் என்று பவுல் கூறுகிறுர். இலக்கம் குழப்பிக்கிடக்கிறது.

79. பவுலைச்சுற்றி வீசிய ஒளிக்கு இப்படியும் ஒரு பெயருண்டு. இங்கே தலைகீழாகிவிட்டது.

81. இயேசு தாயை இப்படியும் அழைத்தார்.

91. இறைவனை இவ்வாறும் அழைக்கலாம்.

96. யூதாசை அடக்கம் செய்வதற்கு இவனிடமிருந்தே நிலம் வாங்கப்பட்டது.

— இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தமிழ் ஏடு —

தொண்டன்

மெதடிஸ்த கருமபீடம்,
கல்லாறு.

இவ்வேடு, அருட்திரு. பொன். ஆனந்தராஜா அவர்களால், உவெஸ்லி அச்சக வெளியீட்டாளருக்காக, மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.